விலை : ரூபா 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 | சுக்கில ஹூ பங்குனி மீ 10-ம் உ | வெள்ளிக்கிழமை | (23 - 03 - 1990) | ஹிஜ்ரி 1410 | ஷஃபா 25 | ஓசை 33

## அழகு நங்கையர் போட்டி ரத்து

(வண்ணார்பண்ணை)

புத்தாண்டு தினக் கொண்டாட்டத்தையொட்டி யாழ்ப்பாணத்தில் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த அழகு நங்கையர் போட்டி ரத்துச் செய்யப்பட்டுவிட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அணியினர் தெரிவித்த கடும் ஆட்சேபத்தைத் தொடர்ந்தே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

இலங்கையில் எதிர்வரும் தமிழ் - சிங்கள புத்தாண்டு தினத்தையொட்டி தேசிய அளவில் 'அவுது குமாரி' என்னும் அழகு ராணிப் போட்டி நடைபெற விருந்தது. இப்போட்டி வடக்குக் கிழக்குப் பகுதிகளில் அழகு நங்கை என பெயர் மாற்றப்பட்டு நடைபெற அரசு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

இவ் அழகு நங்கைத் தெரிவு தமிழ் மக்களின் கலாச்சாரத்திற்கு ஒவ்வாதது என மக்கள் மத்தியில் அபிப்பிராயம் எழுந்திருந்ததைத் தொடர்ந்தே விடுதலைப் புலிகள் மகளிர் அணியினர் இவ்விடயத்தில் தலையிட்டதாகத் தெரியவருகின்றது.

# சார்க்மாநாடு இலங்கையிலா மாலைதீவிலா?

## கொழும்பில் நடத்த ஏனைய நாடுகள் ஆதரவில்லை

(கொழும்பு)

**சார்க் மாநாடு இலங்கையில்தான் நடைபெறவேண்டுமென்று இலங்கை அரசு பிடிவாதமாக நிற்கிறது. இதேசமயம் இந்த மாநாட்டை மாலைதீவில் நடத்தவேண்டுமென்று மாலைதீவு ஜனாதிபதி அப்துல் கயூம் கோரிக்கை விடுத்துள்ளார். மாலைதீவில் நடத்தவேண்டுமென்ற கோரிக்கைக்கு இந்தியா பக்கபலமாக நின்று ஆதரவளித்துவருகிறது.**

சார்க் மாநாடு கடந்த வருடம் இலங்கையில் நடைபெற்றிருக்க வேண்டும். ஆனால் அந்நியப் படைகளான இந்திய இராணுவத்தினர் இலங்கையிலிருக்கும் போது இம் மகாநாட்டை இலங்கையில் நடத்த முடியாதென்றும் இலங்கை மண்ணிலிருந்து இந்தியப் படைகள் வெளியேறியதும் இதை இங்கு நடத்தலாமென்றும் இலங்கை அரசு தெரிவித்து வந்தது.

சார்க் மாநாட்டை இலங்கையில் நடத்துவது சம்பந்தமாக சென்ற ஆண்டிலேயே இங்கு வந்து ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் ஆலோசனை நடத்தியிருந்தார். இந்திய இராணுவம் வெளியேறிய பின் இலங்கையில் நடத்தலாமென திரு. பிரேமதாஸா திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தார்.

மார்ச் முப்பத்தொராந் தேதிக்குள் இந்தியப் படை வெளியேறிவிடுமென இந்தியப் பிரதமர் உறுதியளித்ததைத் தொடர்ந்து சார்க் மாநாட்டை ஏப்ரலில் கொழும்பில் நடத்துவதற்கான ராஜதந்திர முயற்சிகளை இலங்கை அரசு மேற்கொண்டது.

ஆனால் ஏப்ரலில் ரம்ழான் மாதம் குறுக்கிட்டதால் இஸ்லாமிய நாடுகளின் வசதிகருதி

(6-ஆம் பக்கம் பார்க்க)

## நாளை கடைசி ஜவானுக்கு வழியனுப்பு விழா ஏற்பாடு

(திருக்கோணமலை)

இலங்கையில் அமைதி காப்பதற்கென வந்த இந்திய இராணுவத்தின் கடைசி ஜவானும் அதன் தளபதியும நாளை சனிக்கிழமை திருக்கோணமலையிலிருந்து தாயகம் புறப்பட்டுச் செல்லும்போது அவர்களை வழியனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகள் முழுமுரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும் வெளிவிவகார அமைச்சருமான ரஞ்சன் விஜேரத்தின, வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் லெப். ஜெனரல் நளின் செனிவிரத்தின, மற்றும் இலங்கை அரச அதிகாரிகள் பலரும் இவர்களை வழியனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதேசமயம் கொழும்பிலிருந்து சகல பத்திரிகைகளையும் சேர்ந்த பத்திரிகையாளர்களும் இவ்வழியனுப்பு வைபவ நிழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காகத் திருக்கோணமலைக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். கொழும்பிலுள்ள இந்தியத் தூதரும் மற்றும் தூதரக உயர் அதிகாரிகளும் திருமலைக்கு வந்து கொண்டிருக்கிறார்கள் என்றும் ஏற்கனவே இந்தியப் பத்திரிகையாளர் சிலர் திருமலைக்கு வந்து சேர்ந்திருப்பதாகவும் தெரிகிறது.

### மிளகாய்த்தூள் பார்சலுக்குள் பாஸ்போட்டுகள்

(கொழும்பு)

மிளகாய்த்தூள் பார்சலுக்குள் பாஸ்போட்டுக்களும் புகைப்படப் பிரதிகளும் வைத்து கனடாவுக்கு அனுப்பியது சுங்கப் பரிசோதனையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக மூன்று பேர் விசாரணைக்குட் படுத்தப்பட்டுள்ளனர்.

### பன்றி என எண்ணிச் சுடப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவில் வயலில் வேலை செய்து கொண்டிருந்தபோது ஒருவர் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகிக் காயமடைந்தார்.

சுப்பிரமணியம் சற்குணராசா என்ற நபர் தான் வயலில் குனிந்து வேலைசெய்து கொண்டிருந்தபோது, பன்றி வேட்டையாட வந்தோர் தன்னைப் பன்றி என நினைத்து இருட்டினில் சுட்டு விட்டதாகவும், இதனால் தனது கையில் காயம் ஏற்பட்டு, யாழ். வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

(லோ)

### உரக்களஞ்சியம் அமைக்க முயற்சி

## மீண்டும் கொழும்பில் சவூதி அரேபிய தூதரகம்

(கொழும்பு)

இலங்கைக்கும் சவூதி அரேபியாவிற்கும் இடையில் மீண்டும் இராஜதந்திர உறவுகள் விருத்தி செய்யப்படவுள்ளன. 1984-இல் இலங்கையில் அமெரிக்கத்தூதரகத்தில் இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவொன்று ஆரம்பிக்கப்பட்டபோது சில அரபு நாடுகள் இலங்கையுடனான தூதரக உறவுகளை முறித்துக்கொண்டன.

கடந்த செவ்வாய்க்கிழமை இஸ்ரேலிய நலன்காக்கும் பிரிவு மூடப்பட்டதும் மீண்டும் இலங்கையுடன் தூதரக உறவை ஏற்படுத்திக்கொள்ள சவூதி அரேபியா இணக்கம் தெரிவித்துள்ளது. இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவு மூடப்பட்டதற்கு உள்நாட்டில் இருந்தும் வெளிநாட்டிலிருந்தும் ஜனாதிபதி பிரேமதாஸாவிற்கு பாராட்டுக்கள் கிடைத்துள்ளன.

### பத்திரிகையாளர் உயர் ஸ்தானிகரானார்

(லண்டன்)

இந்தியாவின் பிரபல பத்திரிகையாளரான குல்தீப் நாயர் இந்தியாவின் உயர் ஸ்தானிகராக மார்ச் 15 முதல் இங்கிலாந்துக்கு நியமிக்கப்பட்டுள்ளார். இந்தியாவின் ராஜதந்திரியாக, ஒரு பத்திரிகையாளர் நியமனம் பெறுவது இதுதான் முதல் தடவையாகும்.

## போலி ஏஜெண்டுகளை நம்ப வேண்டாம்

### -யப்பான் தூதரகம்

(கொழும்பு)

யப்பானில் வேலை வாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி சில மோசடி ஏஜெண்டுகள் சில இளைஞர்களிடம் யப்பான் விஸாவை வழங்கி வருவதாகவும், பொதுமக்கள் மிகவும் அவதானமாக நடந்து கொள்ளுமாறும் யப்பானிய

## வீடமைப்புத் திணைக்கள கட்டிடம்

### பிரபாவின் மகள்

கொண்டிருந்தபோது, பன்றி வேட்டையாட வந்தோர் தன்னைப் பன்றி என நினைத்து இருட்டினில் சுட்டு விட்டதாகவும், இதனால் தனது கையில் காயம் ஏற்பட்டு, யாழ். வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். (லோ)

## உரக்களஞ்சியம் அமைக்க முயற்சி

(வடமராட்சி கிழக்கு)

மருதங்கேணியில் கமநல சேவை நிலையத்தின் உப அலுவலகமும், உரக்களஞ்சியமும் அமைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வடமராட்சி கிழக்கில் உள்ள அம்பன் கமநல சேவை நிலையத்தின், உப அலுவலகமாக இது செயற்படும்.

யாழ். மாவட்ட கமநல சேவை நிலையத்தின் உதவி ஆணையாளர் திரு. சிவசுவாம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். (36)

## போதைப் பொருள் பாவித்தவருக்கு தண்டனை

(யாழ்ப்பாணம்)

போதைவஸ்துப் பாவனைக் குற்றத்திற்காக யாழ். பஸ் நிலையத்தில் ஒருநபர் மின் கம்பத்தில் பிணைக்கப்பட்டிருந்தார். முப்பத்தைந்து வயதுடைய இந்நபர் மொட்டை அடிக்கப்பட்டு குற்றவிபரம் தாங்கிய அட்டையுடன் மக்கள் பார்வைக்காக நிறுத்தப்பட்டிருந்தார் இத்தண்டனைக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் உரிமை கோரி உள்ளனர். (லோ)

## தமிழ் மாணவர்கள் சுற்றுலா

(வவுனியா)

நீண்ட இடைவெளிக்குக்குப் பின்னர் ஏற்பட்டுள்ள அமைதியைத் தொடர்ந்து வவுனியா தமிழ் மகாவித்தியாலய உயர்தர மாணவர்கள் நாட்டின் தென்பகுதி மற்றும் புராதன பகுதிகளுக்கு கல்விச் சுற்றுலா செய்ய முடிவு செய்துள்ளனர்.

இந்தச் சுற்றுலாப் பயணம் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட உள்ளது. இதில் ஆசிரியர்கள், மாணவர்கள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

திருக்க வேண்டும். ஆனால் அந்நியப் படைகளான இந்திய இராணுவத்தினர் இலங்கையிலிருக்கும் போது இம் மகாநாட்டை இலங்கையில் நடத்த முடியாதென்றும் இலங்கை மண்ணிலிருந்து இந்தியப் படைகள் வெளியேறியதும் இதை இங்கு நடத்தலாமென்றும் இலங்கை அரசு தெரிவித்து வந்தது.

சார்க் மாநாட்டை இலங்கையில் நடத்துவது சம்பந்தமாக சென்ற ஆண்டிலேயே சார்க் அமைப்பின் இப்போதைய தலைவரான பாகிஸ்தான் நாட்டின் பிரதிநிதி சனை நடத்தியிருந்தார். இந்திய இராணுவம் வெளியேறிய பின் இலங்கையில் நடத்தலாமென திரு. பிரேமதாஸா திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தார்.

மார்ச் முப்பத்தொராந் தேதிக்குள் இந்தியப் படை வெளியேறிவிடுமென இந்தி மாநாட்டை ஏப்ரலில் கொழும்பில் நடத்துவதற்கான ராஜதந்திர முயற்சிகளை இலங்கை அரசு மேற்கொண்டது.

ஆனால் ஏப்ரலில் ரம்ழான் மாதம் குறுக்கிட்டதால் இஸ்லாமிய நாடுகளின் வசதிகருதி

(6-ஆம் பக்கம் பார்க்க)

வொறு ஆரம்பிக்கப்பட்ட போது சில அரபு நாடுகள் இலங்கையுடனான தூதரக உறவுகளை முறித்துக்கொண்டன.

கடந்த செவ்வாய்க்கிழமை இஸ்ரேலிய நலன்காக்கும் பிரிவு மூடப்பட்டதும் மீண்டும் இலங்கையுடன் தூதரக உறவை ஏற்படுத்திக்கொள்ள

## வீடமைப்பு திணைக்கள கட்டிடம் சொந்தம் யாருக்கென இழுபறி

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்திற்கு முன் அமைந்துள்ள வீடமைப்பு திணைக்கள கட்டிடம், யாருக்குச் சொந்தம் என்ற நிலையில் உள்ளது. தேசிய வீடமைப்பு அதிகாரசபை அமைத்த இந்த கட்டிடத்தைப் பின்பு மாகாண அரசின் கீழ் வீடமைப்புத் திணைக்களமாக மாற்றப்பட்டது. ஆனால் இந்த கட்டிடம் தமக்கே சொந்தமென தேசிய வீடமைப்பு அதிகாரசபை கோரி வருகிறது.

இக்கட்டிடம் யாருக்குச் சொந்தமென நிரந்தரமான ஒரு தீர்வு காணும் வரை இந்

(6 ஆம் பக்ககம் பார்க்க)

## யாழ்.செயலகத்தில் கூட்டத்திற்கு எம், பி.க்கள் வரவில்லை.

(யாழ்ப்பாணம்)

1990 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவு திட்ட ஒதுக்கு நிதியைப் பயன்படுத்தவெனத் திட்டங்களைத் தயாரித்துத் தரும்படி, அந்தந்தப் பகுதி பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கோரிக்கை விடப்பட்டது. அத்துடன் இதற்கென இம்மாதம் 19ஆம் திகதியிலிருந்து 22ஆம் திகதி வரை யாழ். செயலகத்தில் கூட்டம் ஒன்று நடைபெறுமென இவ் எம். பிக்களுக்குத் தெரிவிக்கப்பட்டும், எவரும் இது சம்பந்தமாக சடிதம் எதுவும் அனுப்பாமையினால், இக்கூட்டத்தைக் காலவரையறையின்றி பின் போடப்பட்டுள்ளதாகச் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவிக்கின்றார். (லோ)

## அதிபர்கள் இடமாற்றம் ரத்து

(யாழ்ப்பாணம்)

யாழ் இந்துக்கல்லூரி அதிபர் திரு. எஸ். பொன்னம்பலம் அவர்களுக்கும் கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் திரு அ. பஞ்சலிங்கம் அவர்களுக்கும் வழங்கப்பட்ட இடமாற்றங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

(6ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாவின் மகள் பற்றியவதந்திபொய்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் மகள் துவாரகாவயிற்றோட்டநோயினால் இறந்து விட்டதாக வீரவேங்கை என்னும்பத்திரிகையில் வெளிவந்த செய்தி தவறானதாகும். துவாரகா குதூகலத்துடன் இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கு முன்னரும் இப்படியானபொய் வதந்திகள் இந்தியாவில் இருந்தும் கொழும்பிலிருந்தும் பரப்பப்பட்டன. விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் கொல்லப்பட்டார் என்றசெய்தி இந்திய வானொலியில் ஒலிபரப்பப் பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## போலி ஏஜெண்டுகளை நம்ப வேண்டாம்

-யப்பான் தூதரகம்

(கொழும்பு)

யப்பானில் வேலை வாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி சில மோசடி ஏஜெண்டுகள் சில இளைஞர்களிடம் பெருந்தொகையான பணத்தைப் பெற்று வருவதாக கொழும்பிலுள்ள யப்பானிய தூதரகம் எச்சரித்துள்ளது.

இந்த ஏஜென்டுகள் யப்பான் விஸாவை வழங்கி வருவதாகவும், பொதுமக்கள் மிகவும் அவதானமாக நடந்து கொள்ளுமாறும் யப்பானிய தூதரகம் அறிவித்துள்ளது.

இவ்வாறு வரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் எனவும் தூதரகம் மேலும் அறிவித்துள்ளது.

## கூட்டுறவுச் சங்கங்களில் நிதி நெருக்கடி

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக கூட்டுறவு வட்டாரங்கள் தெரிவித்தன.

1987 ஸ்ரீலங்கா ராணுவ நடவடிக்கை காரணமாக வவுனியாவிலிருந்து மா கொண்டு வர லொறிகளுக்கு கூலி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இதனை புனர்வாழ்வு அமைச்சு தருவதாக வாக்குறுதியளிக்கப்பட்டது.

இந்தக் கூலியாக ஒவ்வொரு சங்கத்துக்கும் ஐம்பதாயிரம் ரூபா வழங்கபபடவுள்ளது. ஆனால் இதுவரையும் அது வழங்கப்படவில்லை.

சில பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கடந்த கால வன்முறைகளின்போது பலத்த சேதமாகியுள்ளதுடன் கொள்ளைச் சம்பவங்களால் பலத்த நட்டத்தையும் எதிர்பார்க்கின்றன.

எனவே புனர்வாழ்வு அமைச்சின் இந்த ஐம்பதினாயிரம் ரூபா வழங்கப்பட்டால் ஓரளவு இச் சங்கங்களை நடாத்தலாம் எனவும் கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (12)

## ஊழியர்களின் வேலை நிறுத்தம்; தபாலகம் செயலிழந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதம தபால் அலுவலகத்தில் சமயாசமய ஊழியர்கள் ஐந்தம்ச கோரிக்கை ஒன்றை முன்வைத்து அடையாள மறியல் போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர் இதனால் தபாலகம் செயலிழந்து காணப்பட்டது.

தற்காலிகமாக கடந்த பல வருடங்களாக தாம் சேவை செய்து வரும் அதேவேளை வெளியிலிருந்து தொழிலாளர்களை பெற்றுக்கொண்டதற்கு ஆட்சேபனை தெரிவித்தே இந்த மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

சேவை மூப்பு அடிப்படையில் ஊழியர்கள் நிரந்தர நியமனம் பெறவேண்டும். ஆறு மாத காலமாக சமயாசமய ஊழியர்களாக தொழிலாற்றியோர் பதிவு செய்யப்படல் வேண்டும். சுண்டுக்குளி, வண்ணார்பண்ணை உபதபால் அலுவலகங்களில் வேலை செய்யும் சமயாசமய ஊழியர்கள் சுற்றுமுறையில் வேலைக்கமர்த்தப்படவேண்டும். இந்தப் போராட்டம் செய்ததற்காக எந்த ஒரு ஊழியரையும் அதிகாரிகள் பழிவாங்கக் கூடாது என ஐந்து கோரிக்கைகளையும் தபால் திணைக்கள அதிகாரிகளிடம் வழங்கி உள்ளனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அரச நியமனங்கள் யாவும் உடனடியாக இடைநிறுத்தம்

(கொழும்பு)

அரசாங்க சேவைக்கான ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு, நியமனங்கள் என்பவற்றை உடனடியாக நிறுத்துவதாக அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

அத்துடன் சமயாசமய, தற்காலிக நியமனங்கள் ஊர்ஜிதமாக்கப்படுவதும் உடனடியாக நிறுத்தப்படும்.

அரசாங்க, கூட்டுத்தாபனங்கள், மாகாணசபைகள், அரசு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நெளுக்குளம் பாடசாலைக்கு 15 புதிய ஆசிரியர்கள்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் அதிக மாணவர்களைக் கொண்ட முன்னோடி பாடசாலைகளில் ஒன்றான நெளுக்குளம் பாடசாலைக்கு தற்போது புதிதாக பதினைந்து ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆசிரியர் பயிலுனராக இருந்து நிரந்தர நியமனம் பெற்ற ஆசிரியர்களே இப் பாடசாலைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

இப் பாடசாலை தனது நூறாவது ஆண்டு விழாவை இவ் வருடம் கொண்டாட இருப்பது குறிப்பிடத்தக்கது.

## மகாபொல இல்லாதோருக்கு உபவேந்தர் நிதியில் உதவி!

(பண்டத்தரிப்பு)

மகாபொல நிதி உதவி கிடைக்காத வறிய மாணவர்ளுக்கு, யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் நிதியிலிருந்து மாதாந்த நிதி உதவி வழங்கப்படவுள்ளது.

இதன்படி யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா, இருபத்தைந்து மாணவர்களுக்கு இந்த நிதி வழங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

வறுமை, வசதியீனங்களால் இந்த மாணவர்களின் கல்வி தடைப்படக்கூடாது என்பதற்காகவே இந்த நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

## பட்டதாரிச் சம்பளம்

(பண்டத்தரிப்பு)

ஆசிரிய சேவையிலிருந்து கொண்டு பட்டதாரியான ஆசிரியர்களுக்கு 1988 அக்டோபர் மாதத்திலிருந்து பட்டதாரிச் சம்பளம் வழங்கப்படவுள்ளது.

1984 ஆம் ஆண்டு ஜனவரி முதல் 1988 ஆம் ஆண்டு ஜனவரி வரை பட்டதாரியாக பட்டம் பெற்றவர்களுக்கே இந்தப் பட்டதாரிச் சம்பளம் வழங்கப்படும்.

இதற்கேற்ப யாழ். மாவட்டத்தில் பணிபுரியும் இவ்வாறான பட்டதாரி ஆசிரியர்களுக்கு இதனை வழங்கும் நடவடிக்கைகளை யாழ். கல்வித் திணைக்கள நிதிப்பிரிவு மேற்கொண்டு வருகிறது. (12)

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

தனிச் சீனியில் அரைத்த ஐசிங் சுகர் எங்களிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
M.G.M. 777, K.K S. ROAD JAFFNA. (B-67)

---

B-M.C. லொறி - 24/6431 24/3251, கார், மொறிஸ், ஒக்ஸ்போர்ட். S. மகேந்திரா, 34, ஆடியபாதம்வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்., 53, K.K.S. றோட், யாழ்ப்பாணம். B-136

---

எம்மிடம் சகலவிதமான, பெயின்ற் வகைகளும் கட்டிடப் பொருள் கூட்டுத்தாபன பொருட்களும், மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
வினாயகர் ஹாட்வெயர் 185, கே. கே. எஸ். வீதி, குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில். B/338

---

எம்மிடம் கினிசப்பு, மாம் பலகை, ரீப்பை வகைகளும் விற்பனைக்குண்டு. நீங்கள் நாடவேண்டிய முகவரி:- கிமலயா மரக்காலை 208, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். (B-348)

---

14 இஞ்சி கிறைண்டர் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளவும். எஸ்.சுப்பிரமணியம் அன் கொம்பனி 53, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். (B-140)

---

கிருமிநாசினிகள், காய்கறி விதைகள், மண்வெட்டி பிடிகள் முதலியவற்றுக்கு தலை சிறந்த இடம் அக்றோ தவாஸ், 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (B-333)

---

நீரிழிவு வியாதிகளுக்கு உகந்த தனிக் கோதுமை அரிசியில் தயாரிக்கப்பட்ட ஆட்டாமா, கோதுமை, அரிசிக் குறுணல், கோதுமை அரிசி றவை எங்களிடமும், பிரதான கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். M- G. M. No. 777 K. K. S. Road, Jaffna. (B/67

### சேவை

RAJZ BRAND எவசில்வர் பாத்திரங்கள் எங்கும் கிடைக்கும், உங்கள் விருப்பமே எங்கள் சேவை! பற்பல டிசைன்


மக்கள் முன்னணி பிரதம அமைப்பாளர் பேச்சு

# எமது ஆயுதப்போராட்டத்தினால்தான் இன்று புரட்சிகர மாற்றம் ஏற்பட்டுள்ளது

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் சுதந்திரமானவர்கள். விடுதலைப்புலிகளை எவரும் ஏமாற்ற முடியாது. நாம் ஏமாறக் கூடியவர்கள் அல்ல.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரதம அமைப்பாளர் திரு. எஸ். பரமமூர்த்தி (மூர்த்தி) அண்மையில் வாழைச்சேனை காகித ஆலை ஊழியர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கில் உரையாற்றுகையில் இவ்வாறு கூறினார்.

மக்கள் முன்னணி வாழைச்சேனை அமைப்பாளர் எஸ். பி. தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் அவர் மேலும் பேசுகையில்

சுதந்திரம் என்பது பேச்சுவார்த்தை மூலம் கிடைத்த வரலாறு இல்லை. அது போராட்டத்தின் மூலம் கிடைக்கும். கடந்த காலங்களில் பேச்சுவார்த்தைகள் மூலம் பெறுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால் கிடைக்கவில்லை. இதனால் தான் ஆயுதப்போராட்டம் தொடங்கினோம். இதன் எதிரொலியாகவே இன்று புரட்சிகரமான மாற்றம் ஏற்பட்டுள்ளது. இன்று ஸ்ரீலங்கா அரசுடன் மேற்கொண்டுள்ள பேச்சுவார்த்தை நம்பிக்கையின் அடிப்படையிலானதாகும்.

மாகாணசபை தீர்வு நாம் ஏற்றுள்ள இடைக்கால தீர்வாகும். நாம ஏற்கப்போகும் மாகாணசபை இன்றைய மாகாணசபையை விட வேறுபட்டதாகவே இருக்கும் என்றார்.

மற்றும் வி பு ம. முன்னணி உப செயலாளர் செல்வி சுந்தரி, மத்திய குழு உறுப்பினர் செங்கதிர் ஆகியோரும் பேசினர். 37)

---

## வடமராட்சி கிழக்கிற்கு மாத்தயா விஜயம்செய்தார்

(வடமராட்சி கிழக்கு)

விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா) வடமராட்சி கிழக்கிற்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை விஜயம் ஒன்றினை மேற்கொண்டார்.

வடமராட்சி கிழக்கிற்கு விஜயம் செய்த திரு. கோ. மகேந்திரராஜா மருதங்கேணியில் உள்ள வீடோன்றில் வைத்து அப்பகுதி கிராமங்கள் ஒவ்வொன்றிலுமிருந்து வந்த மக்கள் கிலரைச் சந்தித்தவுடன் அப்பகுதி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கேட்டறிந்ததுடன், இன்றைா அரசியல் நிலை குறித்தும் கலந்துரையாடினார்.

திரு. கோ. மகேந்திரராசாவுடன் (மாத்தயா) தமிழீழ விடுதலைப் புலிகளின் வடமராட்சி இராணுவப் பொறுப்பாளர் திரு. சூசை, திரு. சுரேஸ் வடமராட்சி கிழக்குப் பொறுப்பாளர் திரு. எக்னா ஆகியோரும் வருகை தந்திருந்தார்கள்.

---

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

---

## மானிப்பாயில் அன்னை பூபதி நினைவு

(சுதுமலை)

''உடனடி யுத்த நிறுத்தமும் புலிகளுடன் பேச்சுவார்த்தையும்'' என்ற கோரிக்கையை முன் வைத்து உயிர் நீத்த அன்னை திருமதி பூபதி கணபதிப்பிள்ளையின் ஈராண்டு நிறைவு நினைவு ஞாபகார்த்தமாக மானிப்பாய் பகுதி எங்கும் பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், வாசிகசாலைகள் மற்றும் பொதுமன்றங்கள் அனைத்திலும் நினைவு தினக் கூட்டங்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

பல இடங்களில் அன்னையின் உருவப்படம் வைத்து அலங்காரம் செய்யப் பட்டிருப்பதையும் காணக் கூடியதாகவிருக்கின்றது. (19)

---

## குடும்ப நாவல்

மீரா வெளியீடு கே. எஸ். ஆனந்தன் எழுதிய ''பூஜைக்காக வாடும் பூவை'' குடும்பத்தில் தோன்றும் அனைத்துப் புறலுக்கும் அசையாது

---


தேவை

சித்திராலயா

புளொக் தயாரித்தல் ஸ்ரூடியோ வேலை பழகுவதற்கு 17 வயதுக்குட்பட்ட பையன்கள் தேவை தேர்ந்தெடுக்கப்படுவோர் நஷனல் அப்பரன்டிஸ் போட் (National Appentise Board) ஊடாக ஆவன செய்யப்படும்.

சித்திராலயா
ஸ்ரூடியோ


## அன்னை பூபதியின் நினைவாக வவுனியாவில் அஞ்சலிக்கூட்டம்

(வவுனியா)

இந்திய ஆக்கிரமிப்பாளரால் தியாகி அன்னை பூபதியின் போராட்டம் கருத்தில் எடுத்துக் கொள்ளப்படாத வேளையில், அன்னையவர்கள் மக்களின் விடிவிற்காய் தொடர்ந்து உண்ணாவிரதமிருந்து தன்னுயிரை போக்கிக் கொண்டார் என்று விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட உறுப்பினர் திரு. விஜயன் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை வவுனியா புதிய பஸ் நிலையத்திற்கருகே, உண்ணாவிரதமிருந்து மரணித்த அன்னை பூபதியின் நினைவு அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்ட போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

எமது போராட்டத்தை மாறுபட்ட கோணத்தில் எடுத்துச்செல்லும் இவ்வேளையில் இத்தாயை நினைவு கொள்வோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய ஆசிரியர் ஜனாப் எஸ். ஏ. சமத் பேசும் போது எமது போராட்டத்தில், போராளிகளுக்கு மாத்திரம் பங்கில்லை. மக்களுக்கும் நிறையப் பங்குண்டு என்பதை அன்னையின் போராட்டம் எமக்கு உணர்த்தி விட்டது. வயது முதிர்ந்த வேளையில் துணிச்சலுடன் போராடி, தன் உயிரை அன்னையவர்கள் தியாகம் செய்துள்ளார் என்று குறிப்பிட்டார்.

திரு. கோ. நடேசபிள்ளை தலைமையில் நடைபெற்ற மேற்படி அஞ்சலிக் கூட்டத்தின் ஆரம்பத்தில் அன்னையின் உருவப்படம் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. (தி)


CIC பெயின்ற் வகைகள்
டியூகோ
டிலக்ஸ்
பென்றலைற்
மற்றும் பேர்மோகிளேஸ்
[PERMOGLAZE]
பெயின்ற் வகைகளும்
நிதான விலையில் பெற்றுக்கொள்ள
வேல் றேட் சென்ரர்
114, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (பி/352)

புதுவருட வாழ்த்துக்கள்
எமது வாடிக்கையாளர்களுக்கு
உரித்தாகுக!
தரமான பாண் வகைகளையும்
மற்றும்
பிஸ்கற், திண்பண்டங்களைப்
பெற்றிட
அம்பாள்


## யாழ் நகரில் இன்றைய சினிமா


வின்சர் - யாழ்
10.30 2.30 6.30
மோகன் - சுகாஷினி
நெஞ்சத்தை கிள்ளாதே

81 வது நாளாக!!
நியூ சாந்தி (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்'
ரஜனி - அமலா நடித்த
கொடி பறக்குது
(கலர்)

7 வது வாரம்
மனோகரா - (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி. நடித்த
மனிதன்
(கலர்)

ஜனத்திரள் காட்சிகள்
ஹரன் யாழ்.
10-30 2-30 6-30
கமலஹாசன்
சரண்யா நடித்த
நாயகன்
(கலர்)

லிடோ (யாழ்)
75வது நாளை நோக்கி
அரங்கு நிறைந்த காட்சிகள்
10. 30, 2. 30, 6. 30
★ பிரபு ★ சரிதா
பூ- பூவா பூத்திருக்கு
(கலர்)

ராஜா (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
ராஜாதி ராஜா
(கலர்)

125வது நாளை நோக்கி
அரங்கு நிறைந்த காட்சிகள்
வெலிங்டன் (யாழ்)
தினசரி
10. 30, 2. 30 6. 30
★ கார்த்திக் ★ குஷ்பு
வருஷம் 16
(கலர்)

ஸ்ரீதர் (யாழ்)
10-30, 2. 30, 6. 30

களில் பற்பல ரகங்கள்! சாப் பாட்டுப் பீங்கான்கள் செற் சட்டிகள், தாச்சிச் சட்டிகள், றேகள், சோஸ்பான்கள். பொரியல் சட்டிகள், டின்னர் செற்கள், ரீ செற்கள் கோவிற் சாமான்கள் இன்னும் பற்பல நம்பிக்கை நிதானம் RAJZ BRAND, பார்வை அறை S. A. தேவதாசன், சூராவத்தை, சுன்னாகம். (B-270)

புனித வாழ்வைச் சித்தரிக்கும் குடும்ப நாவல் ராஜன் புத்தக சாலை, ஸ்ரீகாந் புத்தகசாலை பஸ் நிலையம், யாழ்ப்பாணம் (B-130)

ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
I/353

S. S. M. மணி பேக்கறி
இலங்கைநாயகி கோவிலடி,
நல்லூர்
B-358

கமலஹாசன் -- சுஜாதா
அவள் ஒரு
தொடர்கதை

## வாடகைக்கு

வீடியோ பிரதிகள் வாடகைக்கு விடப்படும். ஹப்பி வீடியோ சென்ரர், 613, பீச் றோட், குருநகர். (B- 335)

## தேவை

சமையல்காரர், சமையல் வேலை பழகுபவர்கள் உணவு பரிமாறுபவர் தேவை.

யாழ் சைனீஸ் றெஸ்ரோறன்ற் முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

நேரில் வரவும் - (காலை 9.00 - 11.00 வரை) அல்லது விண்ணப்பிக்கவும். (B/318)

## தேவை

பழைய கொப்பி புத்தகங்கள் தேவை. இருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும். அண்ணா தொழிலகம் இணுவில். (B-3 50)

# அதிர்ஷ்டலாபச் சீட்டு

மேற்குறிப்பிட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டுக்குரிய அதிர்ஷ்ட ரிக்கட்டுக்கள் இவ்விடம் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.

**ரூபா 10.**

1 ஆம் பரிசு அழகிய ஒக்ஸ்போர்ட் மோட்டார் வண்டி
2ஆம் பரிசு கொண்டர் லங்சர் (90) மோட்டார் சைக்கிள்
3ஆம் பரிசு புதிய சாலி மோட்டார் சைக்கிள்
மேலும் 10 ஆறுதல் பரிசுகளாக வே ல்நாட்டு சாறிகளும் வழங்கப்படும்.

சீட்டிழுப்பு 0 -05-1990 புதன்கிழமை மாலை 5-30 மணியளவில் யாழ். நாயன்மார் கட்டு இராமநாதன் வீதி, ஸ்ரீ துர்க்கை அம்பாள் தேவஸ்தான முன்றலில் அதிர்ஷடம் பார்க்கப்படவுள்ளது.

**EUROPE CHINA HOTEL**
89, 2ND CROSS STREET; JAFFNA. B/383

# பனை அபிவிருத்தி ஆய்வு

பனை அபிவிருத்தி சபை, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்ட அமைப்பு ஆகியவற்றின் அனுசரணையுடன் பனைவள அபிவிருத்தி ஆய்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ் ஆய்வு தொடர்பாக இரண்டு மாதங்களுக்கு (சித்திரை, வைகாசி - 1990) வெளிக்கள ஆய்வாளர்கள் வடக்கு - கிழக்கு பிரதேசத்திலிருந்து தேவைப்படுகிறார்கள். வெளிக்கள ஆய்வாளர்களுக்கு தகுந்த கொடுப்பனவுகள் வழங் ப்படும். சேர விரும்புபவர்கள் கல்வித் தகமை விபரங்களுடன் இ மாத முடிவுக்குள் தொடர்பு கொள்ளவும்.

பேராசிரியர் **நா. பாலகிருஷ்ணன்**
கலைப்பீட அலுவலகம்,
யாழ். பல்கலைக்கழ ம்
21-03-1990
R-145

வருக! வருக!
புதுவருடமே!

பலசரக்குச்
சாமான்களை
நிதான விலையில்
பெற நாடுங்கள்

**S. T.**
**ரேடர்ஸ்**
கல்வியங்காடு
B/357

ஸ்ரான்லி வீதியில்

# STANLEY FURNISHING PALACE

நங்கையர் விரும்பும் நவநாகரிக வீட்டுத் தளபாடங்களுக்கு இன்றே விஜயம் செய்யுங்கள்!

ஸ்ரான்லி போ்ணிசிங் பலஸ் 5, 7, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (B-351)

# லித்வேனியர்கள் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் - கொர்பச்சேவ்

## லித்வேனியா மீதான அச்சுறுத்தலை நிறுத்த அமெரிக்கா கோரிக்கை

(மொஸ்கோ)

லித்வேனியர்கள் எல்லா ஆயுதங்களையும் ஒப்படைக்க வேண்டும் என்று சோவியத் ஜனாதிபதி கொர்பச்சேவ் உத்தரவு இட்டிருக்கிறார். கடுமையான விசாக் கட்டுப்பாடுகளையும், எல்லைப் பிரதேசங்களில் பல சோதனைகளையும் மேற்கொள்ள பணித்திருக்கிறார். இவ் அறிவித்தல் ஆனது தொலைக்காட்சிமூலம் மக்களுக்கு அறிவிக்கப்பட்டது.

மேலும் எல்லாவிதமான ஆயுதங்களையும் குறிப்பாக சுடுவதற்கு பயன்படுத்தப்படும் ஆயுதங்களை பொது மக்களிடம் இருந்து பறிக்குமாறு உள்துறை மற்றும் பாதுகாப்புத்துறை அமைச்சர்களிடம் கொர்பச்சேவ் கேட்டுள்ளார். இது விரைவில் நடைமுறைக்கு கொண்டுவரப்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

### ஆயுத விற்பனைக்கு தடை

லித்வேனியாவில் ஆயுதவிற்பனையும் தடை செய்யப்பட்டுள்ளது. வெளி நாட்டவர்களின் சட்ட விரோத நடவடிக்கைகளை தடை செய்யுமாறும், அதேவேளை வெளிநாட்டவர் பயணம்செய்வதை கட்டுப்படுத்துமாறும் வெளியுறவு அமைச்சசத்திற்கு உத்தரவு இடப்பட்டுள்ளது.

அரசியல் சாசனத்தை கடைப்பிடிப்பதற்கு உதவி செய்யுமாறும், லித்வேனிய மக்களின் உரிமைகளையும், சட்டபூர்வமான நலன்களை பாதுகாக்குமாறு சோவியத் அரசு பாதுகாப்புப் படைகளை கேட்டுள்ளது.

இதேவேளை புதிய நடவடிக்கைகள் சட்டப்படியானவைஅல்ல என்றும், அவை தம்மால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்றும் லித்வேனியத் தலைவர் தெரிவித்தார். கொர்பச்சேவின் நடவடிக்கை குறித்து அமெரிக்கா கவலை தெரிவித்திருக்கும் அதேவேளை லித்வேனியா மீதான அச்சுறுத்தலை நிறுத்தும்படியும் சோவியத் யூனியனை கேட்டுள்ளது. பால்டிக் குடியரசு மக்கள் சுயநிர்ணயம் பெறுவதை அமெரிக்க வரவேற்கிறது என்றும் வெள்ளை மாளிகையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

### அமெரிக்க ஜனாதிபதி நம்பிக்கை

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் கருத்துத் தெரிவிக்கையில் சோவியத் அரசு லித்வேனியா மீது அமைதியான மாற்றம் ஒன்றை நடைமுறைப்படுத்தும் என தான் நம்புவதாக தெரிவித்தார். இதுபற்றி தான் சோவியத் ஜனாதிபதியுடன் விவாதிப்பார் என்றும் அவர் தெரிவித்தார்.



## தென்னாபிரிக்க அரசுடன் மண்டேலா பேச்சுவார்த்தை

(வின்ரோக்)

தென் ஆபிரிக்க அரசுடன் அடுத்த மாதம் தாம் பூர்வாங்க பேச்சுக்கள் நடாத்தப் போவதாக நெல்சன் மண்டேலா அறிவித்துள்ளார். இப் பேச்சு வார்த்தைக்குமுன்பாக தென் ஆபிரிக்க அரசினால் கைது செய்யப்பட்ட அரசியல் வாதிகள் விடுதலை செய்யப்படவேண்டும் என்றும், நெருக்கடிகள் அகற்றப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார். இவ்வாறு நமீபிய கொண்டாட்டங்களில் கலந்து கொள்ள நமீபியா சென்ற மண்டேலா பல உலகத் தலைவர்களோடு நடத்திய பேச்சுவார்த்தையில் குறிப்பிட்டார்.

## வினி மண்டேலா மீது பிடிவிறாந்து

(யோசன்பேர்க்)

ஆபிரிக்க கறுப்பின மக்களின் தலைவர் நெல்சன் மண்டேலாவின் மனைவி வினி மண்டேலா மீது சென்ற திங்களன்று யோசன்பேர்க் நீதிமன்றம் பிடிவிறாந்து பிறப்பித்துள்ளது.

யோசன்பேர்க் நகரில் வெள்ளையர் வாழும் பகுதியில் வினிமண்டேலா வளர்ப்பு மீன், மீன்தீனிக்கடை ஒன்றுக்கு உரிமையாளராம். இக்கடைக்கு சென்ற வருடத்துக்கான காப்புறுதிப் பணத்தைச் செலுத்தத் தவறியது சம்பந்தமாக நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு விசாரணையின்போது, வினி நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறிவிட்டார். இது தொடர்பாகத் தான் இவர் மீது பிடிவழக்கமென்றும், வினியைக் கைது செய்வது எமது நோக்கமல்ல என்று ஒரு பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

வினி தனது கணவன் நெல்சன் மண்டேலாவுடன் சுற்றுப் பிரயாணம் ஒன்றை மேற்கொண்டு சென்ற சனியன்றுதான் தென்ஆபிரிக்காவை வந்தடைந்தார். நெல்சன் மண்டேலா தற்சமயம் ஆபிரிக்க தேசிய காங்கிரசின் உபதலைவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## யப்பானில் தொழிலாளர் இல்லை

(டோக்கியோ)

யப்பானில் தொழிலாளர் பற்றாக்குறை சமீபகாலத்தில் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளதாக யப்பான் தொழில் அமைச்சு மேற்கொண்ட சணிப்பீடு ஒன்று தெரிவிக்கின்றது.

60% அதிகமான வியாபார நிறுவனங்கள் ஊழியர் பற்றாக் குறையால் கஷ்டமுறுவதாக தொழில் அமைச்சு கடந்த திங்களன்று வெளியிட்ட அறிக்கையில் கூறுகிறது.

## வீட்டில் கொள்ளை

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து வந்திருக்கிறோம் வீட்டைச் சோதனையிட என்று கூறிக் கொண்டு கடந்த ஞாயிறு வீடொன்றிற்குள் ஆயுதங்களுடன் புகுந்த கொள்ளையர்கள் மூவர் அவ் வீட்டிலிருந்து 15 ஆயிரம் ரூபா ரொக்கப் பணத்தையும், 35 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த தங்க நகைகளையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். இச் சம்பவம் ஒன்று அக்கராயன்குளம் 8 ஆம் துண்டிலுள்ள சுப்பையா இராசமணி வீட்டில் இடம் பெற்றுள்ளது. (49)

## அமைச்சர் தேவராஜ் யாழ். விஜயம்

(கொழும்பு)

இந்து கலாச்சார விவகார

## பரந்தன் இரசாயன கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு பஞ்சப்படி மீண்டும் வழங்கப்பட்டது

## பாடசாலைக்கு மின் விநியோகம்

(வடமராட்சி கிழக்கு)

இயக்கச்சி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பாடசாலைக் கட்டடத்திற்கும், அதிபர் விடுதிக்கும் பச்சிலைப் பள்ளி பிரதேச விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியினர் நிரந்தர மின் வசதியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர்.

பாடசாலைக் கட்டடம் 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவிலும், அதிபர் விடுதி 1 லட்சத்து 40 ஆயிரம் ரூபா செலவிலும் அமைக்கப்பட்டுள்ளது. (36)

## இன வேற்றுமையை அகற்ற தென்னாபிரிக்காமீதுநிர்ப்பந்தம்

(வின்ரோக்)

இனவேற்றுமையை அகற்றுமாறு தென் ஆபிரிக்காவை தொடர்ந்து நெருக்குதல் செய்ய வேண்டுமென்றுநமீபிய சுதந்திர கொண்டாட்டங்களில் கலந்து கொண்ட பல நாடுகளின் தலைவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இதற்காக ஆபிரிக்க ஒற்றுமைத் தாபனம் மற்றும் முன்னணி அரசுகளின் தாபனங்கள் வாயிலாக ஒருங்கிணைந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் கூறினார்கள்.

இக் கொண்டாட்ட தினத்தில் கலந்து கொண்ட இந்தியப் பிரதம மந்திரி வி. பி. சிங் பல தலைவர்களை சந்தித்து பேச்சுவார்த்தைநடாத்தினார். இன ஒதுக்கலுக்கு எதிரான போராட்டத்தில்இந்தியாவின் முழு ஆதரவு கிடைக்கும் என்று அவர் வலியுறுத்தினார். இவ்சுதந்திர தினகொண்டாட்டங்களின் போது ஆபிரிக்க ஒற்றுமைத் தாபனத்தின் தலைவர் எகிப்திய ஜனாதிபதி முபாரக்கையும் நமீபிய ஜனாதிபதி சாம் என்யோமாவையும் யூகோஸ்லாவிய ஜனாதிபதியையும் மற்றும் அமெரிக்க சோவியத் வெளியுறவு அமைச்சர்களையும் சந்தித்தார் மேலும் வி. பி. சிங் தெரிவிக்கையில் சுதந்திர நமீபியாவிற்கு பொருளாதார தொழில் நுட்ப உதவி வழங்குவதாக உறுதி அளித்ததுடன் தென்ஆபிரிக்க இனப் பாகுபாட்டை அகற்ற உடனடியாக நடவடிக்கைகள் எடுப்பதில் மற்ற நாடுகளுடன் ஒத்துழைப்பதாகவும் தெரிவித்தார்.

அதே வேளை அமெரிக்கா நமீபியாவுடன் முழு ராஜரீக உறவுகளை ஏற்படுத்தி இருக்கிறது. இதுபற்றி அமெரிக்க ஜனாதிபதி வெளியிட்ட அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டார். தென் ஆபிரிக்காவின் ஆட்சியின்போது நமீபியா மீது விதிக்கப்பட்ட தடைகள் அகற்றப்படுவதாக கூறினார்.

## இமெல்டா வழக்கில் றேகன் சாட்சி

(நியூயோர்க்)

முன்னாள் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி மார்க்கோஸின் மனைவி இமெல்டா மார்க்கோஸ் மீது சதி, மோசடி தொடர்பாக வழக்கொன்று நியூயோர்க் சமஷ்டி நீதிமன்றத்தில் இவ்வாரம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது.

இமெல்டாவின் வழக்கறிஞர் ஜெறிஸ்பென்ஸ் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி றேகனை சாட்சியாகஅழைக்க உள்ளாராம்.

மார்க்கோஸ் குடும்பத்துக்கும் றேகனுக்குமிடையில் நெருங்கிய நட்புறவு முன்பு நிலவி வந்தது. அவசியமேற்பட்டால், றேகன் சாட்சியாக அழைக்கப்படுவார் என வழக்கறிஞர் ஜெறிஸ்பென்ஸ் தெரிவித்தார். ஆனால் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி நீதிமன்றத்தில் சாட்சிக் கூண்டில் ஏறிச் சாட்சியமளிப்பதைத் தவிர்ப்பதற்கு சில சம்பிரதாயங்கள் அனுகூலமாயுள்ளன. அமெரிக்க முன்னாள் ஜனாதிபதிகள் நீதிமன்றத்தில் சாட்சியாக அழைப்பது, அமெரிக்க வரலாற்றில் மிக அரிதாம்.

## ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காகப் போராடியவர்

### நினைவுதினக் கூட்டத்தில் சுதந்திரக்கட்சி எம். பி.

(கொழும்பு)

அமரர் கே. ஏ. சுப்பிரமணியம் நாட்டையும் மக்களையும் ஒரு பரந்த கொள்கை அடிப்படையில் நேசித்து வந்தார். தான் பற்றிக்கொண்ட கொள்கை வழியில் நின்று தான் சார்ந்த கட்சியின் மூலமாக அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காக அயராது போராடியும் வந்தார். அவரது வாழ்வு ஒரு நேர்மையான அரசியல்வாதியின் வாழ்வாகும். அவரது இழப்பு நாட்டிற்கும் மக்களுக்கும் பேரிழப்பாகும்.

இவ்வாறு அண்மையில் கே. ஏ. சுப்பிரமணியம் நினைவாக கொழும்பில் நடைபெற்ற நினைவு அஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரை

யீட்டிற்கு வழிவகுக்கும் என்பதைக் கட்சியின் மூலம் சுட்டிக்காட்டி வந்தவர்.

அது மட்டுமல்ல இந்திய மேலாதிக்க சக்திகள் நமது நாட்டிற்குப் படைகளைக் கொண்டு வந்தபோது அதை எதிர்ப்பதிலும் தெளிவான கொள்கை உடையவராக இருந்தார். கடந்த இரண்டரை ஆண்டுகளாக இந்தியப் படைகள் நமது நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று இடையறாது குரல் கொடுத்தும் வந்தவர்.

மேலும் செந்திவேல் தொடர்ந்து பேசுகையில் இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வு காணப்படல் வேண்டும் இதைத் தென்னிலங்கையின் அரசியல்

நாசமடையும் என்பதில் சந்தேகமே இல்லை. இனப்பிரச்சினைக்கு ஓர் இடைக்காலத் தீர்வு காணப்படுவது அவசியம். அதைச் சாத்தியமற்றதாக்குவதற்குப வேறுமுனைகளில் முயற்சிகள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் செய்யப்படுகின்றன. அதில் ஒன்றே அண்மையில் வெளியிடப்பட்ட ஈழப்பிரகடனமாகும். இத்தகைய பிரகடனம் தவறான அரசியலைப் பின்பற்றியதன் விளைவான அரசியல் விரக்தியின் வெளிப்பாடாகவே கொள்ள முடியும்.

இவ் அஞ்சலிக் கூட்டத்தில் கலாநிதி கே. எல். வி. அழகிய வண்ண, நிகால் டயஸ், ஏ. சி. எம். காசிம் ஆகியோர்

விட்டார். இது தொடர் பாகத் தான் இவர் மீது பிடி விறாந்தை நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

பிடிவிறாந்தை வினியிடம் காட்டி அவரை நீதிமன்றத்துக்கு வர வைப்பதுதான்

(கொழும்பு)

இந்து கலாச்சார விவகார அமைச்சர் திரு. பி. தேவராஜ் எதிர்வரும் ஏப்ரல் 25 ஆம் திகதி ஐந்து நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ் மாவட்டத்துக்கு வரவுள்ளார்.

## மீண்டும் வழங்கப்பட்டது

(கிளிநொச்சி)

பரந்தன் இரசாயனத் தொழிற் சாலை ஊழியர்களுக்கு 1988 ஆம் ஆண்டு முதல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஞ்சப்படி மீண்டும் வழங்கப் பட்டன.

மேற்படி கூட்டுத்தாபனத் தலைவர் உபாலி சில்வாவின் பணிப்புரையின் பேரிலே தொழிற் சாலை தொழில் முகாமையாளர் திரு பொ. தியாகராசாவால் 1988 ஆம் ஆண்டுக்குரிய வாழ்க்கைச் செலவுப் பஞ்சப்படியும் 90ஆம் ஆண்டுக்குரிய பஞ்சப்படியும் இவ் சகல ஊழியர்களுக்கும் வழங்கப்பட்டது.

1989 ஆம் ஆண்டுக்குரிய பஞ்சப்படி மட்டும் வழங்கப் படாததால் அதையும் கூடிய கெதியில் வழங்க ஆவன செய்யும்படி கூட்டுத்தாபன கூட்டுறவு வர்த்தக ஊழியர் சங்கம், கூட்டுத்தாபன தலைவரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பெற்ற நினைவு அஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய சுதந்திரக்கட்சி எம். பி ஜனாப் ஹலீம் இசாக் கூறினார்.

கே. நடனசபாபதி தலைமையில் கொழும்பு விஜயராம மாவத்தையில் உள்ள விஞ்ஞான முன்னேற்றச் சங்க மண்டபத்தில் இக்கூட்டம் நடைபெற்றது.

இடது கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் சி. கா. செந்திவேல் உரையாற்றுகையில்:-

தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் எப்பொழுதும் அநீதி அடக்குமுறைகளுக்கு எதிராகப் போராடுவதில் முன்னின்று வந்த ஒரு சுயநலமற்ற அரசியல்வாதி. இனப்பிரச்சினையின் அரசியல் தீர்வைத் தட்டிக் கழித்து வந்த பேரின வாதிகளின் தீய செயற்பாடுகள் இறுதியில் இந்தியத் தலை

படல் வேண்டும் இதைத் தென்னிலங்கையின் அரசியல் தலைவர்கள் மிகவும் நிதானத்துடன் அணுக வேண்டும். மீண்டும் பேரினவாதப் போக்குகள் தொடருமானால் நாடு

கிய வண்ண, நிகால் டயஸ், ஏ. சி. எம். காசிம் ஆகியோர் உரையாற்றினார்கள். திரு. சில்லையூர் செல்வராஜன் 'என் அவன்' என்னும் தலைப்பில் கவிதை வாசித்தார்.

# பனம் பொருள் உற்பத்தித் துறையில் ப. அ. சபை முன்னேறி வருகிறது

## செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதி புகழாரம்

(கொழும்புத்துறை)

வடபகுதி மக்களின் வாழ்வோடு இணைந்தும், பல்வேறு பயன்களையும் பொருளாதார ரீதியில் பெற்றுக் கொடுக்கும் பனைமரத்தை நாம் தகுந்த முறையில் பயன்படுத்தவேண்டும். பனந்தும்பு உலகரீதியான வர்த்தகத்தில் இடம் பெற்றுள்ளது. எனவே பனம்தும்பு உற்பத்தியில் கூடுதலாக ஈடுபட்டு அதிக வருவாயை ஈட்ட முயல வேண்டும்.''

இவ்வாறு பூநகரி விளாசியோடையில் இலங்கை பனை அபிவிருத்திச்சபையின் அனுசரணையுடன், இலங்கைசெஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை நடாத்தும் பனம்தும்பு பயிற்சி நிலையத்தின் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பேசுகையில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி செல்வி வெண்டி வூட்வேட் (நியூசிலாந்து) கேட்டுக்கொண்டார்.

பூநகரிமகளிர் குழுத்தலைவி செல்வி க. மனோன்மணி தலைமையில் இச்சான்றிதழ் வழங்கும் வவபவம் நடைபெற்றது. செல்வி வெண்டி தொடர்நது பேசுகையில் கூறியதாவது,

''விளாசியோடைக் கிராமம் மிகவும் பின்தங்கிய கிராமமாக உள்ளது. இக்கிராம மக்களுக்கு புனர் நிர்மாண உதவிகள் இன்றியமையாததாக உள்ளது. ஏற்கனவே செஞ்சிலுவைச் சங்கம் இங்கு நிவாரண உதவிகளை வழங்கியுள்ளது. பொருளாதார ரீதியில் ஊக்குவிக்கு முகமாகப் பனம்தும்பு உற்பத்தியில் ஈடுபடுத்துவதற்காக இப்பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது

பனை அபிவிருத்திச் சபை பனையில் இருந்து பல்வேறு பயன்களை அறிமுகப்படுத்தி பனம் பொருள் உற்பத்தித் துறையில் முன்னேறி வருகின்றது மகிழ்ச்சிக்குரியது விளாசியோடைக் கிராமம் பனை வளத்தை அதிகமாகக் கொண்டுள்ளதால் பனையை மூல வளமாகக் கொண்டு வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்துவதுடன் கூடுதலான வருமானத்தை ஈட்டவும் வழிவகுக்க வேண்டும்' என்றார்.

செல்வி வெண்டி இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் சார்பில் வினாசியோடை தும்பு உற்பத்திப் பயிற்சியாளர்களான முப்பது மகளிருக்கு ரூபா 500 வீதம் 15,000 ரூபாவை ஊக்குவிப்பு நிதியாக வழங்கினார்.

இவ்வைபவத்தில் இலங்கை பனை அபிவிருத்திச் சபையின் பிரதிநிதியாகச் சமுகமளித்திருந்த கணக்காய்வாளர் திரு எஸ். ஜே. ஜெயக்குமார் பேசுகையில் குறிப்பிட்டதாவது.

''பனை அபிவிருத்திச்சபை கிராமந் தோறும் பனம் பொருள் அபிவிருத்தியை ஊக்குவித்து வருவதுடன் கிராமிய மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காகத் தொழிற் துறைப் பயிற்சிகளையும் அளித்து வருகின்றது. பனம் தும்பு உற்பத்தி மூலம் பனை வளத்துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் அதிக வருமானம் பெறமுடியும். இதற்காகப் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. க. நடராசா பல அபிவிருத்தி தொழில் நுட்ப ஆலோசனை, சந்தைப் படுத்தல், நிதியுதவித் திட்டங்களைத் துரிதமாக மேற்கொண்டு வருவதுடன் சாய உத்தியோகத்தர்களைப் பனைவள உற்பத்தியாளர்களைத் தேடி நேரில் சொல்லுமாறும் பணித்துள்ளார்.''

மன்னார் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திரு. தி. இராசநாயகம், யாழ். செஞ்சிலுவைச் சங்க உப தலைவி திருமதி எஸ். சண்முகலிங்கம் செயலாளர் திரு. எஸ். சிவானந்தராசா, திரு கே. பால சுப்பிரமணியம் ஆகியோரும் பேசினர். பனம் தும்புப்பயிற்சி பெற்ற முப்பது மகளிருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. (24)

# 500 ரூபா காசோலையை 25 ஆயிரமாக மாற்ற முயற்சி

ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கி கிளையில் 500 ரூபா காசோலையை 25,000 ரூபாவாக மாற்றுவதற்கு எடுத்த முயற்சி வங்கி அதிகாரிகளால் முறியடிக்கப் பட்டது.

நேற்றுமுன் தினம் இந்த வங்கிக்கு இக்காசோலையை ஒருவர் கொண்டுவந்தார் காசாளர் சந்தேகப்பட்டு காசோலையில் குறிப்பிட்ட கடை உரிமையாளரின் ஒப்பத்தைப் பெற்று வருமாறு அவருக்கு தெரிவித்தார். ஆனால் அந்தநபரோ வெளியே சென்று போலி கையெழுத்துடன் வந்தார்.

மேலும் சந்தேகம் கொண்ட வங்கி அதிகாரிகள் சம்பந்தப்பட்ட கடை உரிமையாளருடன் தொடர்பு கொண்ட போது காசோலையைக் கொண்டுவந்தவர் தலைமறைவாகி விட்டார்.

இந்தக்கடையிலிருந்து தபால் மூலம் ஊழியர் சேமலாப நிதிக்கு அனுப்பிய காசோலையே இவ்வாறு மாற்ற முயற்சிக்கப்பட்டது.

## காவலாளிகள் வீடுகளில் தூக்கம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு, நயினாதீவு பல நோக்குகூட்டுறவுச் சங்கத்தின் கிளைஸ்தாபனங்களில் இரவுக் காவலாளிகளாக கடமை புரிவோரில் ஒரு சிலர் கடமையை முழுமையாகச் செய்யாமல் இரவில் குறிப்பிட்ட நேரம் வரை காவலிலிருந்து விட்டு அருகிலுள்ள வீடுகளில் சென்று படுத்துறங்கிவிடுகின்றனராம். (22)

# கைதடி சைவச் சிறுவர் இல்ல வருடாந்த கொடி தினம்

(கொழும்புத்துறை)

'மக்களுக்காக போராடுவதே எமது நோக்கம் தற்போதைய சூழ்நிலையில் நாம் அமைதி காக்க வேண்டும். நாம் கட்டுப்பாடாகவும், அமைதியாகவும் செயற்பட்டதால் படையினரால் எமக்கெதிராகப் பலமான ஒருபோராட்டத்தை நடத்த முடியவில்லை.''

இவ்வாறு கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் பதினைந்தாவது வருடாந்த கொடி நாள் விழாவில் பேசுகையில் விடுதலைப் புலிகளின் நாவற்குழிப் பிரதேச பொறுப்பாளர் திரு. சண்முகம் அப்பர் குறிப்பிட்டார்.

இக் கொடிநாள் விழாவிற்கு தலைமை வகித்த திருமதி மங்கையற்கரசி சிற்றம்பலம் தனதுரையில் கூறியதாவது,

''இங்கு வெளியிடப்பட்டுள்ள கொடி அறக் கொடியாகும். இக் கொடி தர்ம சிந்தனை உள்ளவர்களைச் சேர்க்கும் கொடி. எவ்வளவு கஷ்டங்கள் துன்பங்கள் நேரிடினும் அநாதைகளுக்கு உதவத் தயங்கக்கூடாது மக்களிடம் கருணை காட்டத் தர்ம சிந்தையுடன் பணியாற்ற வேண்டும். நாயன்மார்கள் நால்வர் காட்டிய வழியில் நடப்பது எமது தலையாய கடமையாகும்.

பிரதம விருந்தினராக கலந்துகொண்ட பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாராதா சேவாச்சிர ஸ்தாபகர் சுவாமி சித்ரூபானந்தா உட்பட பலர் உரையாற்றினார்கள்.

# மக்கள் முன்னணியின் பொதுக் கூட்டம்

(வவுனியா)

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பொதுக்கூட்டம் இன்று வவுனியா நகரில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோ. மகேந்திரராசாவும், செயலாளர் யோகரட்ணம் யோகியும் காசிஆனந்தனும் மற்றும் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர் வடக்குக்-கிழக்கு பகுதிகளில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் நடத்திவரும் கூட்டங்களின் தொடர்ச்சியாகவே இது நடைபெறவுள்ளது.

## விபரங்கள் சேகரிப்பு

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில உள்ள அங்கவீனர், மனோவியாதியஸ்தர்களின் விபரங்கள் சேகரிக்கப் படுகின்றன.

சமூக சேவைத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வலி. மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 25 கிராம சேவகர் மூலம் விபரங்கள் சேகரிக்கப்படுகின்றன. (12

# ஐந்து வருடங்களின் பின் சென்ரல்

# சென்ஜோன்ஸ் கிரிக்கெட் போட்டி

(யாழ். விளையாட்டு நிருபர்)

சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும், யாழ். மத்திய கல்லூரிக்குமிடையில் 87வது மாபெரும் கிரிக்கெற் போட்டி 23 ஆம் திகதி வெள்ளிக் கிழமையும், 24ஆம் திகதிசனிக்கிழமையும், இன்றும், நாளையும் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும். ஐந்து வருடத்திற்குப் பின் இப்போட்டி நடைபெற இருப்பது குறிப்பிடத்தக்கது. 1984 ஆம் ஆண்டு இப்போட்டி நடைபெற்ற போது இரு கல்லூரிகளும் மிகவும் சிறபபாக விளையாடி ரசிகர்களின் பாராட்டுக்களைப் பெற்றுள்ளனர்.


சென். ஜோன்ஸ்கல்லூரிக்கு சதீசன் தலைமைதாங்குகிறார் இவரின் கோஷ்டியில் சிறந்த துடுப்பாட்டக் காரரும், பந்து வீச்சாளரும் உள்ளனர். சென் ஜோன்ஸ் கல்லூரி இதுவரைக்கும் பங்கு பற்றிய போட்டிகளில் தோல்வி காணாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது. சென். ஜோன்ஸ் கல்லூரிவீரர் முரளி இம்முறை நடைபெற்ற கிரிக்கட் போட்டிகளில் ஆகக் கூடுதலாக 93 ஓட்டங்களைப் பெற்றுள்ளார் பிரசாந்தனும் விளையாடிய கிரிக்செற்போட்டிகளில் மிகவும் கவனமாகவும் சிறப்பாகவும் விளையாடி கூடுதலான 86 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். பந்து வீச்சிலும் முரளி சதீசன் திறம்பட பந்துவீசி பல விக்கற்றுக்களை கைப்பற்றினார்கள். திரு.ஜே. அமலசீலன் விளையாட்டுக்களுக்குப்பொறுப்பாளரும் திரு. சி. சூரியகுமார் பயிற்சியாளரும் சென். ஜோன்ஸ் கல்லூரி அணிக்கு மிகவும் சிறப்பான திறம்பட பயிற்சி அளித்து சென். ஜோன்ஸ் கல்லூரி வெற்றிகளுக்கு உறுதுணையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

சென். ஜோன்ஸ் கல்லூரி மகாஜனாக் கல்லூரியையும் கொக்குவில் இந்துக் கல்லூரியையும் இனிங்ஸ் வித்தியாசத்தால் வெற்றியீட்டினர். வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை 10 விக்கெற்றுக்களால் வெற்றியீட்டினர்.


யாழ். மத்திய கல்லூரிக்கு ம. முகுந்தன தலைமை தாங்குகிறார். இவர் ஓர் சிறந்த துடுப்பாட்டக்காரரும் பந்து வீச்சாளருமாவார். இவர்பங்கு பற்றிய கிரிக்கெற் போட்டிகளில் மிகவும் சிறப்பாக விளையாடி அதிகமான ஓட்டங்களை பெற்றுள்ளார். இவரின் உபதலைவராக ம. சுரேந்திரஜித் திகழ்கிறார். இவரும் யாழ். மத்திய கல்லூரியின் போட்டிகளில் அதிகமான ஓட்டங்களைப் பெற்றுள்ளார். க. பிரபாகரன் ம. முகுந்தன் ம. பேர்னாட் ரமேஸ் பல விக்கெற்றுக்களைக் கைப்பற்றி இருக்கின்றார்கள்.

வி. ட. கணேசலிங்கம் இக் கல்லூரியின் விளையாட்டுப் பொறுப்பாசிரியராகக் கடமை புரிகிறார். யாழ். மத்திய கல்லூரி இரு போட்டிகளில் தோல்வி கண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியைப் பார்ப்பதற்கு ஜனத்திரள் அதிகமாக வருமென எதிர்பார்க்கப் படுகிறது. வெற்றி தோல்வி யாருக்கென சனிக்கிழமை மாலை தெரிந்துவிடும். (42)



யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி கிரிக்கெட் அணி



# கொடிகாமம் கொத்தணி விளையாட்டுப் போட்டி

(விசேட நிருபர்)

கொடிகாமம், கொத்தணிப் பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற வருடாந்த மெய் வல்லுனர் போட்டிகளில் 11 வயதுக்கு உட்பட்ட பிரிவில் மந்துவில் றோ.க. பாடசாலை மாணவி செல்வி. சு.புலோமினா சிறந்த வீராங்கனைக்குரிய வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றார்.

போட்டிகள் கடந்த 15ஆம், 16 ஆம் திகதிகளில் கொடிகாமம், திருநாவுக்கரசு மகா வித்தியாலய விளையாட்டு அரங்கில் நடைபெற்றன.

மேற்படி போட்டிகளில் கொடிகாமம், கொத்தணிக்கு உட்பட்ட ஆறு மகாவித்தியாலயங்களும், மூன்று வித்தியாசாலைகளும் பங்கு கொண்டன. இப்போட்டிகளில் ஆறு மகா வித்தியாலயங்களுக்கு மத்தியில் செல்வி. சு. புலோமினா பங்கெடுத்த மந்துவில் றோ. க. கனிஷ்ட பாடசாலை ஐந்தாவது இடத்தைப் பெற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது. (21)

## செஞ்சிலுவைச் சங்க உதவியுடன் குடி நீர் விநியோகம்

(தீவுப்பகுதி)

யாழ்ப்பாணம் செஞ்சிலுவைச் சங்கத்தினால் வேலணைப்பகுதி மக்களுக்குகுடிநீர் வழங்குவதற்காக அன்பளிப்பு செய்யப்பட்டபவுசருடன்கூடிய மினி உழவு இயந்திரத்தின் மூலம் தற்போது ஊர்காவற்றுறை, வேலணை ஆகிய பகுதிகளில் குடி நீர் தட்டுப்பாடான இடங்களுக்கு குடி நீர்விநியோகிக்கப் பட்டு வருகின்றது (15)

## மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியில் சென். பற்றிக்ஸ் வெற்றி

(யாழ். விளையாட்டு நிருபர்)

சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையில் 5வது வருடமாக நடைபெற்ற மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர் கிரிக்செட் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி 22 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி 39 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 105 ஓட்டங்களைப் பெற்றனர். பாஸ்கரன் 22 ஓட்டங்களை பெற்றார். பாரத் சிறப்பாகப் பந்து வீசி 8 ஓட்டங்களைக் கொடுத்து, 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

யாழ்ப்பாணக் கல்லூரி 41 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து, மொத்தம் 83 ஓட்டங்களைப் பெற்றனர். அன்ரனிப்பிள்ளை 7 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

யத்தை சென். பற்றிக்ஸ் கல்லூரியிடம் பறிகொடுத்தது குறிப்பிடத்தக்கது.

மேற்படி போட்டியில் சிறந்த பந்து வீச்சு வீரருக்கான பரிசை யாழ்ப்பாணக் கல்லூரி வீரர் பாரத்தும், சிறந்த துடுப்படி வீரருக்கான பரிசை சென். பற்றிக்ஸ் கல்லூரி வீரர் வன்னியசிங்கமும் சிறந்த விளையாட்டு வீரருக்கான பரிசை சென். பற்றிக்ஸ் கல்லூரி வீரர் ஹரி அன்ரனிப்பிள்ளையும் பெற்றனர்.

பரிசளிப்பு வைபவத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண. பிரான்சிஸ் யோசப் அடிகளார் இவ்விளையாட்டுப் போட்டியின்போது கௌரவிக்கப்பட்டு, இரு கல்லூரி வீரர்களுக்கும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்.

இவ்வைபவத்தில் யாழ்ப்பாணக் கல்லூரியின் பெண்கள் 'பான்ட்' வாத்தியக் கோஷ்டி, இரு கல்லூரிக் கீதங்களும் இசைத்தது குறிப்பிடத்தக்கது (42)

## 3ஆவது ஆண்டு

# நினைவஞ்சலி





யாழ்: மத்திய கல்லூரி கிரிக்கெட் அணி

## சென்றலைட் விளையாட்டுக் கழகம்

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் பொதுக்கூட்டம் அண்மையில் யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

1982 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 10 ஆந் திகதி முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் யாப்பு வரையப்பட்டு முறைப்படி இக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கத்தினர் எல்லாராலும் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இக்கூட்டத்தில் பின்வரும் செயற்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: அதிபர், யாழ். மத்திய கல்லூரி திரு.N இராசரத்தினம், உப போஷகர்: தலைவர், யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் பேராசிரியர் K. தெய்வேந்திரராஜா, தலைவர்: திரு. S. நடராஜா, உபதலைவர்கள்: திரு.K.S. பாலச்சந்திரன் திரு. T. R. தர்மகுலசிங்கம், பொதுக்காரியதரிசி: திரு. K. மகேந்திரநாதன், துணைக்காரியதரிசி: திரு. S. விமலதாசன், பொருளாளர்: திரு. G. S. சாந்திகரன், கணக்காய்வாளர்:- திரு. P. ரஜீவன்

கிரிக்கெட், உதைபந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், மெய்வல்லுநர் பிரிவு என்பவற்றுக்கும் கப்டன், செயலாளர் ஆகியோரும் நியமிக்கப்பட்டனர்.

---

## நீங்காத நினைவில்

மார்ச் - 23

| இலங்கை மண்ணில் பிறப்பு | இந்திய மண்ணில் இறப்பு |
|---|---|
| 25 - 03 - 1927 | 23 - 03 - 1986 |



### கே. டானியல்

(மக்கள் புரட்சி எழுத்தாளர்)

"இலக்கியம் என் சுபாபம்"
"இயக்கம் தான் என் சுவாசம்"
"தோழமை என் ரத்த பந்தம்"

''புரட்சியை துரிதப்படுத்தும் வழிமுறை எதுவோ அதுவே நெறியின் இலக்கணமாகும்'' என்று லெனின் கூறியுள்ளதையே நான் நெறியாக மதிக்கிறேன். அதைத் துரிதப்படுத்தும் செயல்பாடுகளில் ஒன்றாக எழுத்தையும் மேற்கொள்கிறேன்.

- கே. டானியல்

''வசந்தம்''
76/2, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
தோழர்கள்,
பொதுமக்கள்.

B/137

---

னார்.

யாழ்ப்பாணக் கல்லூரியின் கடைசி விக்கெட் சோடிகளான ரவீந்திரனும், கிளி பேட்ராசாவும் சிறப்பாகத் தடுப்பெடுத்தாடியது பாராட்டுக்குரியது.

இப்போட்டிக்கு திரு.வேதாபரணமும், திரு ஸ்ரீதரனும் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினார்கள்.

கடந்த நான்கு வருடங்களாகத் தொடர்ந்து பெற்ற "கதிர்காமர்'' வெற்றிக் கேடயத்தைத் தம்வசம் வைத்திருந்த யாழ்ப்பாணக் கல்லூரி இம்முறை இக்கேட

...திங்களும் இசைந்தது குறிப்பிடத்தக்கது. (42)

---

## சைக்கிள் பாதுகாப்பு நிலையம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் சைக்கிள் பாதுகாப்பு மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

இவ் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர், பாதுகாவலர் ஆகியோர் வழங்கிய நிதியைக் கொண்டே இம்மண்டபம் அமைக்கப்படுவதாக தெரிகிறது. (22)

---


சாயிராம்

# சைனீஸ் டிறகன் றெஸ்ரோரன்ட்

தரமான சுவையான மேலைத்தேய, கீழைத்தேய

**உணவு வகைகளை**

ஓடருக்கும், உடனுக்குடனும் வழங்குவதிலும்

தரமான அதிஉயர்

**பான வகைகள், சூப் வகைகள்**

ஆகியவற்றை விசேட முறையில் வழங்குவதிலும்

இன்று முன்னணியில் திகழ்பவர்கள்

# சைனீஸ் டிறகன் றெஸ்ரோரன்ட்

ஸ்தாபனத்தாரே!

எமது ஸ்தபானத்திற்கு பின்வருவோர் தேவை

1. சமையல் உதவி ஆட்கள்
2. சகல வேலைகளும் செய்யக் கூடியவர்கள்
3. 12 முதல் 16 வயதுள்ள பையன்கள்

தங்கி பணிபுரிபவர்கள் விரும்பத்தக்கது.
திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.

வேறு விபரங்களுக்கு
நேரே எம்முடன் தொடர்பு கொள்க.

168, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

வியாபார நேரம்:
காலை 10 - 30 முதல் இரவு 9-00 வரை

(B.143)


---

தாயின் மடியில் 02-05-1964

தாயக மண்ணில் 26-03-1987

திதி 23-03-1990

## நாகலிங்கம் மனோரஞ்சன்

(மனோ)

விடிந்தும் விடியாத காலைப்பொழுதினிலே
மலர்ந்தும் மலராத மலர்கள் உதிர்ந்தனவே
மண் காக்கப் புறப்பட்ட மண்ணின் மைந்தா மனோவே
மண்ணுக்கு உரமாகினாயே
மண் காக்கும் அரும் பணியில்
தன்னை உவந் தளித்த
மண்ணின் மைந்தன் மனோவிற்கு
எமது கண்ணீர் அஞ்சலிகள்!!

உனை நினைந்துருகும்.

ஊரதீவு
புங்குடுதீவு

அப்பா, அம்மா, சகோதரர்கள்,
மற்றும் உறவினர்கள்

B/141

---


கலைமகள் சனசமூக நிலையம் நடாத்தும்

## விளையாட்டு விழா

காலம்: 15 - 5 - 1990

நிலைய விளையாட்டு தவிர
15 மைல் மரதன் ஓட்டம்
25 மைல் சைக்கிள் ஓட்டம்

நிகழ்ச்சிகளில் பங்குபற்றும் கழகங்கள் மற்றும் வீர வீராங்கனைகள் யாவரும் எதிர்வரும் 10- 5- 90 க்கு முன்னர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரதம விருந்தினர்கள்

திரு. சூசை அவர்கள் (விடுதலைப் புலிகள் வடமராட்சி மக்கள் முன்னணி பொறுப்பாளர்)
திரு. வை. வேலும்மயிலும் (உதவி அரசாங்க அதிபர்)

அன்பர்கள் அனைவரையும் வருகவென அன்புடன் அழைக்கின்றோம்.

துரை சண்முகசுந்தரம்
(செயலாளர்)
கலைமகள் சனசமூக நிலையம்
வல்லை றோட்,
கெருடாவில் தெற்கு,
தொண்டமானாறு.

B 13/6

### சிந்தனைக்கு

ஓடி விளையாடு பாப்பா - நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா - ஒரு
குழந்தையை வையாதே பாப்பா

- பாரதியார்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 23 - 03 - 90

## விளையாட்டு வினையாகக் கூடாது!

யாழ்ப்பாணத்தில் கிரிக்கெட் விழா கோலாகலமாக நடந்துகொண்டிருக்கின்றது.

எங்கு பார்த்தாலும் சிவப்பும் கறுப்புக் கொடியும் நீல மண்ணிறக் கொடியும் பறந்துகொண்டிருக்கின்றன.

வரலாற்றுப் புகழ் மிக்க யாழ்ப்பாணத்தின் பெரிய கிரிக்கெட் போட்டி இன்று ஆரம்பமாவதைத்தான் இவை கடந்த சில நாட்களாகவே பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியும் மோதும் பெரிய கிரிக்கட் போட்டி இது.

எண்பத்தாறு வருடங்களாக நடந்து வந்த இந்தப் பெரிய போட்டி கடந்த ஐந்து ஆண்டுகளாக நடைபெறவில்லை.

சிறிலங்கா அரசபடைகளுக்கும் விடுதலைப் போராளிகளுக்குமிடையே நடைபெற்ற ஆயுதப் போராட்டமும், பின்னர் அமைதிப்படை என்ற பெயரில் வந்த இந்திய இராணுவத்துக்கும் விடுதலைப் போராளிக்குமிடையே நடைபெற்ற போராட்டமும் இந்திய இராணுவத்தினருடன் ஒட்டிக்கொண்டு வந்தவர்களின் அடாவடித்தனங்களும் கிரிக்கெட் போட்டி நடைபெறாமல் தடுத்துவிட்டன.

இந்திய இராணுவத்தினர் தமக்காகவும் தமிழ் மக்களைத் திசை திருப்பவும் இங்கு ஒளிபரப்பிய தூரதர்சன் தொலைக்காட்சியில் கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியை ஒளிபரப்பி கிரிக்கெட் விளையாட்டைத் தமிழ் மக்கள் மறந்து விடாமல் நினைவூட்டினர்.

ரூபவாஹினி ஒளிபரப்பும் இதை நினைவூட்டி வந்தது. ஆனால் எமது பிள்ளைகள் விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபடுவதற்கு மட்டும் இரண்டு நாட்டுப் படைகளும் இடம் வைக்கவில்லை.

இன்று இரண்டு பெரிய ...

# பார், பார் பட்டணம் பார் யாழ். நகர

# பஸ்நிலையசீர்கேடு பார்! --றூபன்

மக்களின் அன்றாட பிரச்சினைகளில் போக்குவரவு மிக முக்கியமானது. அண்மைக் கால சம்பவங்களின்போது வடபகுதி மக்கள் எரிபொருள் தட்டுப்பாடு, வீதித்தடை போன்றவற்றால் மக்கள் மிகவும் கஷ்டப்பட்டனர். இன்று அவை சீராகி வருகின்றன.

ஆனால் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம் நாட்டில் உள்ள ஏனைய பஸ் நிலையங்களைவிட மிக மோசமான கேவலமான நிலையில் இன்று காணப்படுகின்றது. இவ் பஸ் நிலையம் ஓர் பிராந்திய தலைநகரின் மையமாகும். தென் பகுதியில் உள்ள இடங்களில் எப்படி எல்லாம் பஸ் நிலையங்கள் திருத்தப்பட்டுள்ளன என்பதைக் காணலாம். சில தினங்களுக்கு முன்னர் கொழும்பு மற்றும் வெளிநாட்டுப் பத்திரிகையாளர் சிலர் யாழ்ப்பாணம் வந்தபோது அவர்களுடன் நானும் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம் பக்கம் போனேன். அவர்கள் இது என்ன பஸ் நிலையமா அல்லது அகதிகள் சொட்டகைகளா இது திருத்தப்படாதா என்று பல்வேறு கேள்விகளைக் கேட்டனர்.

இப்படியாக அப்பகுதியைப் பார்வையிட்டு அங்குள்ள சில அதிகாரிகள், பயணிகள், பஸ் சாரதிகள், நடத்துனர்கள் போன்றவர்களைச் சந்தித்தோம். ஏன் இப்படியான நிலையில் இந்த பஸ் நிலையம் இருப்பதாகவும், இதைத் திருத்த முடியாதா என்றும் எல்லோரிடமும் கேட்டேன்.

1977இல் சுதந்திரக்கட்சி ஆட்சியில் அன்றைய போக்குவரத்து அமைச்சர் திரு கே. பி. இரத்தினாயக்கா இந்த மத்திய பஸ்நிலையத்தைத் திறந்து வைத்தார். அதன் பின்னர் இந்தப் பஸ்நிலையத்தைப் பற்றி ஒருவருமே கதைப்பதுமில்லை, திருத்த நடவடிக்கை எடுக்கவுமில்லை. ஏன் முன்னர் கூட்டணி எம். பிக்களும் தற்போதுள்ள தமிழ் எம். பிக்களும் இதற்கு நிதி ஒதுக்கி திருத்தியமைக்க வேண்டும் என்றுகூட எண்ணவில்லை. நாம் என்ன செய்வது என்றார் ஒரு அதிகாரி.

பஸ்நிலையத்தில் சாரதி ...

தங்கும் இடம், மின்விசிறி போன்ற வசதிகள் உண்டு. நாம் இங்கே புழுப்போல் துடிக்கிறோம் என்றார் ஒரு ஊழியர்.

திரு. இரத்தினாயக்காவால் திறந்து வைக்கப்பட்ட அந்த அலுவலகம் ஒரு தசரக்கொட்டகையாகவே இன்றும் காணப்படுகின்றது. எப்படித்தான் இவர்கள் இதில் பணியாற்றுகிறார்களோ தெரியவில்லை.

பொதுமக்கள் பஸ்ஸிற்காக நிற்கும் இடங்களுக்குப் போனோம். அந்த இடங்களில் துப்பாக்கி ரவைகள், ஷெல்துண்டுகள்பட்ட ஓட்டைகளாகவும், சேதமாகிய நிலையிலும் காணப்படுகின்றன. பஸ்களின் நேர அட்டவணை இல்லை. மழை வந்தால் நிற்க முடியாது. நண்பகலானால் நிற்க முடியாது. நீங்கள் ஒரு நாள் முழுவதும் இங்கேவந்து இருந்து பாருங்கள் என்றார் ஒரு நேரப்பொறுப்பாளர்.

காரைநகர் பஸ் நிறுத்தும் இடத்திற்குப் போனோம். ஒரு பள்ளம். மழை பெய்தால் மக்கள் தண்ணீருக்குள்ளாலேயே பஸ்களில் ஏற வேண்டும். நிலப்பகுதியாவது கல், தார் போட்டு செப்பனிட மாட்டார்களா?

இவற்றைப்பற்றி சிலஅதிகாரிகளிடம் கேட்டபோது, ஒருவர் சொன்னார். நான் சில மாதங்களால் பென்ஷன் ஆகிவிடுவேன் நாட்டு நிலமை. சீராகிவருகிறது. பொறுப்பானவர்கள் இதனைக் கவனிக்க வேண்டும். நமது எம். பிக்கள் எல்லாவற்றுக்கும் நிதி ஒதுக்கினார்கள். இதனைப் பற்றித் தெரியாது போல. கொழும்பில் பங்களா, வாகன வசதிகளுடன் அவர்கள் இருக்கிறார்கள். இங்கே மக்கள் படும் பாடுகள் தெரியாது என்றார். பஸ் நிலையத்துக்கு எதிர்ப்புறமாகவுள்ள பகுதிக்குச் சென்றோம். அங்கே கழிவு நீர்க்கால்வாய். அதில் உள்ள ஈக்கள் கடைகளிலும் நடமாடுகின்றன. அதாவது அங்குள்ள உணவுக்கடைகளுக்கு முன்பாக உள்ள பகுதி பஸ் நிலைய வாசலில் அன்னாசிப்பழ வியாபாரிகள் உள்ளதால் பஸ்களைத் திருப்பவோ உள்ளே கொண்டு வரவோ மிகவும் கஷ்டமாக இருக்கிறது. என்றார் ஒரு அதிகாரி. அத்துடன பஸ்கள் நிறுத்தப்படும் ஆஸ்பத்திரி வீதிப் பக்கமாக ஆட்டோக்கள் நிறுத்தப்படுகின்றன. நாம் யாரிடம் முறையிடுவது என்றும் அவர் கூறினார்.

1975 இல் பண்ணையில் ஒரு பஸ் நிலையம் கட்டப்பட்டு தூர இடங்களுக்கான பஸ்கள் நிறுத்தப்பட்டன. இப்போதும் அந்தக் கட்டடம் உள்ளது. அது பொதுமக்களுக்கு அசௌகரியமாக இருப்பது என்று மீண்டும் தற்போதைய இடத்துக்கு தூர இடப்பயணங்களை இட மாற்றம் செய்தனர். சில அதிகாரிகளினாலே இவ்வாறு பஸ் நிலையம் காணப்படுகிறது எனவும் ஒருவர் சொன்னார்.

1984க்குப் பின்னர் யாழ். பஸ் நிலையம் பட்ட பாடுகளை மறக்க முடியாது ஒரு சத்தம் கேட்டால் மயான அமைதி. பஸ் நிலையத்தின் நிலப்பகுதி ஒரே குன்றும் குழியுமாக இன்று காணப்படுகிறது.

வடக்கு - கிழக்குபகுதிகளில் புனர்வாழ்வு புனர் நிர்மாண வேலைகளுக்கான ஒதுக்கப்படும் நிதியிலிருந்தாவது இதனைத்திருத்த வேண்டும். அல்லது கொழும்பு, கண்டி, அனுராதபுரம் போன்று புதிதாக கட்டப்பட வேண்டும். வட பிராந்திய போக்குவரத்துச் சபை சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு இதனைச் செய்ய வேண்டும் அல்லது பொதுமக்கள் சபை ஊழியர்கள் சௌகரியமாக தமது பணிகளை மேற்கொள்ள ஒரு கட்டடம் தேவை.

இனி மலசல கூடம் என்ற ஒன்று இங்கே இல்லை. நாட்டிலுள்ள ஏனைய நகர பஸ் நிலையங்களில் இவை ஆண்களுக்கும், பெண்களுக்கும் வேறாக கட்டப்பட்டுள்ளன. ஆனால் இங்கே தூர இடங்களிலிருந்து வருபவர்கள்யாழ். பெரியாஸ்பத்திரிக்கும், நவீன சந்தைக்கும் ஓடுகிறார்கள்.

இந்தப்பெரிய நகரில் ஒரு பொது மலசல கூடமாவது இல்லையா எனவும் அந்த நிருபர்கள் கேட்டனர். சம்பந்தப்பட்டவர்கள் இவற்றைக்கவனித்து உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

# போதைப்பொருள் ஒளிப்புசங்கத்தின் 5 ஆவது கிளை அங்குரார்ப்பணம்

(விசேட நிருபர்)

''நன்மை செய்யப் பிறந்த நாம் நன்மை செய்யப் பிறந்தினாலும், தீமையாவதுசெய்யாதிருந்து அவ்வழிக்கு மக்களைத் தூண்ட வேண்டும். சொந்தபந்தங்களுக்கு தீராத உபத்திரவத்தையும், நிம்மதி இல்லாத வாழ்க்கையையும் அபகீர்த்தியையும் உருவாக்கும் மதுப் பிரியர்களையும், போதைப் பொருள் பிரியர்களையும் ...

வது கிளையை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப்பேசிய குருநகர் போதை வஸ்து ஒழிப்புச் சங்கத் தலைவர் திரு. அ. ஸ்ரனிஸ் லோஸ் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. அ. ஸ்ரனிஸ்லோஸ் மேலும் பேசுகையில், ''போதைப் பொருள் பாவனையால் வருங்காலச் சிறார்களின் அயலவர்களின் வாழ்க்கை பாழடிக்கப் படுகிறது. மது அரக்கனை பூண்டோடு ஒழிப்பதற்கு சபதம் எடுக்கவேண்டும். பொது மக்களைப் படுகுழியில் வீழ்த்தும் போதைப் பொருள் உற்பத்தியாளர்களையும், விற்பவர்களையும் இல்லாமல் செய்யும் வரை எமது கடமை ஓயமாட்டாது.'' இவ்வாறு அவர் தெரிவித்தார். (21)

## ஊர்சுற்றி

எழுதுவது

''பழக்க தோஷம் உடனடியாகத் திருந்துவது கஷ்டம் தான்'' என்றார் நண்பர்.

''என்ன விஜயப்? ஏன் பீடிகை என்றேன்.

விடுதலைப் போராட்டம் இலங்கை இராணுவத்தின் அட்டகாசம் இந்திய இராணுவமும் அவர்களுடன் ஒட்டி வந்தவர்களும்செய்த அட்டூழியங்கள்எல்லாம்ஒரு புறமிருக்க இந்தச் சந்தர்ப்பங்களை வைத்துப் பிழைப்பு நடத்தியவர்கள் பற்றித்தான் நினைக்கிறேன் என்று தொடர்ந்தார் நண்பர்.

போராளிகளைப் போல் போலிவேஷம் போட்டு அகப்பட்டதைச் சுருட்டியவர்கள் ஷெல் அடியிலும் குண்டு வீச்சிலும் சேதமடைந்த வீடுகள், கடைகள், கட்டிடங்களிலுள்ளவற்றை விடுப்புப்பார்க்கவும், உதவி செய்யவும் என்ற போர்வையில் சென்று கதவு, யன்னல்களைக்கூட விடாமல் கொள்ளையடித்தவர்கள், அத்தியாவசியப் பொருட்கள், மருந்து வகைகளை மறைத்து வைத்து பன்மடங்கு விலைகளில் விற்று. கொள்ளை இலாபமடித்தவர்கள் தட்டிக்கேட்க ஆளில்லை என்ற துணிவில், போதை மருந்து கடத்தி வியாபாரம் செய்தவர்கள்;

இத்யாதி, இத்யாதி பேர்வழிகள் நாட்டில் நிலைமை சீரடைந்தாலும் சிலர் பழக்கதோஷத்தைவிட முடியாது. தொடர்ந்தும் இத் தொழில்களில் ஈடுபட்டுத்தான் செய்கிறார்கள் என்று நண்பர் சொன்னார்.

இரண்டு தினங்களுக்கு முன்னர் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள ஒரு மருந்துக் கடைக்கு ஒருவர் சென்றார். டாக்டர்களின் சிபார்சு எதுவுமில்லாமல் வாங்கக்கூடிய மருந்துகளும், மருந்துக்கடைகளிலுண்டு. டாக்டரின் சிபார்சுடன் வாங்க வேண்டிய மருந்துமுண்டு. டாக்டர் எழுதிக் கொடுத்த மருந்துத் துண்டை வாங்கிப் பவுத்திரமாக வைத்துக் கொண்டு, கொடுக்க வேண்டிய மருந்துமிருக்கிறது. அந்த மருந்துக்கடை ...

பண்டகளும் இடம் வைக்கவில்லை.

இன்று இரண்டு பெரிய கல்லூரிகளுக்கிடையே நடைபெறும் பெரிய கிரிக்கெட் போட்டி ஆரம்பமாகின்றது.

எண்பத்தேழாவது வருடப் போட்டி இன்று ஆரம்பமாவதைப் பார்ப்பதற்கும் விளையாட்டு வீரர்களை உற்சாகப்படுத்துவதற்கும் இரு கல்லூரிகளினதும் பழைய மாணவர்கள் வெளியூர்களிலிருந்துகூட வந்துள்ளனர்.

முன்னைய வருடங்களில் இந்த விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றியவர்கள் பழைய மாணவர்கள் என்ற நிலையில் வயது முதிர்ந்தாலும் வாலிப மிடுக்குடன் பார்வையாளர்களாக வந்து உற்சாகத்துடன் கலந்து கொள்வதையும் அந்த நாள் ஞாபகங்களை தங்கள் பழைய நண்பர்களுடன் இன்று பகிர்ந்து கொள்வதும் மறக்க முடியாத ஆனந்தக் காட்சிகள்.

சில மாதங்களுக்குமுன் சிறுவர்களும் இளைஞர்களும் வீடுகளில் தங்கியிருக்க முடியாமலும் வீதிகளில் செல்ல முடியாமலும் பாடசாலைக்கே போக முடியாமலும் இருந்த நிலையையும் இன்று உற்சாகத்தில் திளைத்து நிற்பவர்கள் நினைவில்கொள்ள வேண்டியது அவசியம்.

கிரிக்கெட் விளையாட்டுப் போட்டி நடைபெறும் மைதானம் சில மாதங்களுக்கு முன் என்ன நிலையிலிருந்தது என்பதையும் இக்கல்லூரிகளில் மாணவர்கள் என்ன அவல நிலையிலிருக்க நேர்ந்தது என்பதையும் பழைய மாணவர்களும் இன்றைய மாணவர்களும் மறந்துவிடக்கூடாது.

விளையாட்டுப் போட்டியின் உற்சாகம் விளையாட்டு மைதானத்துடன் நின்றுவிடக் கூடியதாகக் கவனித்துக் கொள்வது அவசியம்.

இன்று வீதிகளிலும் விளையாட்டு மைதானத்திலும் சுதந்திரமாக வலம் வர வாய்ப்பிருக்கிறதென்பதற்காக மற்றவர்களின் அமைதியையும் அவர்களில் பலர் பல இழப்புக்களைச் சந்தித்து மனம் நொந்திருக்கும் நிலையில் அவர்களைப் புண்படுத்தக்கூடியதாக உற்சாகம் கரை புரண்டோட அனுமதிக்காமல் பார்த்துக்கொள்வதும் அவசியமாகும்.

விளையாட்டில் வெற்றியும் தோல்வியும் சகஜம். விளையாட்டு வீரர்களும் அவர்களை உற்சாகப்படுத்தும் பழைய புதிய மாணவர்களும் நிதானத்துடன் நடந்து கொள்வதில்தான் கல்லூரிகளின் பெருமையும் தங்கியிருக்கிறது,

வது என்றார் ஒரு அதிகாரி.

பஸ்நிலையத்தில் சாரதிகள், ஊழியர்கள் தங்கும் பகுதிக்கு சென்றபோது, ஒரே உஷ்ணமாகவும் அசௌகரியமாகவும் இருந்தது. வடபிராந்தியப் போக்குவரத்துச்சபை உயர் அதிகாரிகளுக்கு கார், போதைப் பொருள் பிரியர்களையும் மனம் மாற்ற வேண்டும்.''

இராசாவின் தோட்டம் வீதி, அருள்மாதா சனசமூக நிலையத்தில் போதைப் பொருள் ஒளிப்புச் சங்கத்தின் ஐந்தா

## மக்கள் மடல்

## கோட்டக்கல்வி ஏன்?

பத்திரிகை ஆசிரியர்,
ஈழநாதம்.

யாழ்.கல்விக் கோட்டத்தில் உள்ள யாழ். வண். மேற்கு கொத்தணி அதிபரின் கீழ் வரும் பாடசாலைகளுள் சில பாடசாலை அதிபர்கள் கொத்தணி அதிபர் ஊடாக யாழ். கல்விக் கோட்டத்தோடு தொடர்பு கொள்ளாமல் தங்கள் விருப்பத்திற்கேற்ப யாழ். கல்விக் கோட்டத்தோடு தொடர்பு கொண்டு தங்கள் கருமங்களைச் செயற்படுத்துகிறார்கள். இதே போல கல்விக் கோட்டமும் கொத்தணி அதிபரூடாகவல்லாது நேரடியாகவே இப்பாடசாலைகளுடன் தொடர்பு கொள்கிறது. இதனால் அப்பாடசாலைகளைப் பற்றி பெற்றோர்கள் தெரிவிக்கும் குறைபாடுகளை விசாரிக்க கொத்தணி அதிபரால் முடிவதில்லை.

யாழ் கல்விக் கோட்டத்திற்குள் வரும் மற்றைய கொத்தணி அமைப்புக்குள் உள்ள பாடசாலை அதிபர்கள் அவ்வக் கொத்தணி அதிபர் ஊடாக செயற்படும் போது யாழ் வண். மேற்கு கொத்தணிக்குள் உள்ள சில பாடசாலை அதிபர்கள் இவ்வாறு செயற்பட அனுமதிப்பது ஏன்? யாழ். கல்விக் கோட்டம் இதற்கு ஊக்கமளிப்பதும் ஏன்? இது பற்றிய விசாரணை ஒன்றை யாழ். பிரதிக் கல்விப் பணிப்பாளர் மேற்கொள்வாரா?

எஸ். எம். சுல்தான்முகிதீன்
130, முஸ்லிம் கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

## திரிபோஷா வழங்கலிலும் திருகுதாளம்

ஆசிரியர்,

ஐயா,

கடந்தவாரம் புங்குடுதீவு மடத்துவெளிப் பகுதியில் நிறை குறைந்த. பிள்ளைகளுக்கு வழங்கப்படும் போஷாக்கு உணவாகிய திரிபோஷா பல போஷாக்கற்ற நிறைகுறைந்த பிள்ளைகளுக்கு வழங்கப் படவில்லை. இப் போஷாக்குணவு வழங்காத பிள்ளைகளின் தாய்மார் ஏன் வழங்கப் படவில்லை...? என்று கேட்ட போது

''உங்கள் பிள்ளைகளுக்கு சத்துள்ள சாப்பாடுகளைவாங்குக் கொடுத்தால்அவர்களுக்கு போஷாக்கு உண்டாகும். அத்துடன் நிறையும் கூடும்'' என்று நையாண்டியாக, பதிலளித்து விட்டு குறிப்பிட்ட ஒரு சிலருக்கு மட்டுமே மேற்படி உணவை வழங்கி விட்டுச்சென்றார்களாம் இவ்வுணவு வழங்கலில் ஈடுபட்ட சில மாதர்கள் இத்தகைய பாரபட்ச நடவடிக்கைகள் நீங்க சம்பந்தப்பட்ட உணவுவழங்கலுடன், தொடர்புடைய நிறுவனத்தார் நடவடிக்கை எடுப்பார்களா..?

வி.கே.ரி. சுந்தர்-
புங்குடுதீவு

## கிராம முன்னேற்றத்திற்கு பெண்கள் உழைக்கவேண்டும்

(கொழும்புத்துறை)

''இன்றைய சூழ்நிலையில் பாஷையூர் மக்கள் மாதர்சங்கம் ஆரம்பித்துச் செயல்பட முன் வந்ததையிட்டு நான் பாராட்டுகின்றேன். தற்போது மாதர்களின் பணி கிராம மட்டத்தில் இன்றியமையாதது.

தமிழ்மக்களின் கலை, கலாச்சாரம் பண்பாடு ஆகியனவற்றைப் பேணுவதுடன் பெண்கள் அனைவரும் ஒன்றிணைந்து கிராம முன்னேற்றத்திற்குச் சேவையாற்ற முன்வரவேண்டும். கிராமியக்குழந்தைகள் நல்வாழ்வு, சுகாதாரம், பின்தங்கிய மக்களுக்கு நல்வாழ்வு வாழ வழி வகுத்தல் ஆகியனவற்றில் பெண்கள் சிறப்பாகச் செயல்பட்டு முன்மாதிரியாக விளங்கவேண்டும்!''

இவ்வாறு யாழ் உதவி அரசாங்க அதிபர் திரு கே.சபாபதிப்பிள்ளை யாழ். பாஷையூர் மக்கள் முன்னேற்றச் சங்கச் சனசமூக நிலையம் மகளிர் கிராம அபிவிருத்திச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு எஸ்.கே, செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் சிறப்பாக நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. சபாபதிப்பிள்ளை தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

,,எமது சிறார்களை நல்வழிப்படுத்தி, நல்ல பழக்கம் பண்புள்ளவர்களாக வளர்ப்பதின்மூலம் மாதர்கள் சிறப்பான வருங்காலத்தை உருவாக்க முடியும் என்றார்.

## தொண்டர் ஆசிரியர் ஒருவருக்கு பிரஜா உரிமை இல்லை என்பதால் நிரந்தர நியமனமும் இல்லை.

(வவுனியா)

செட்டி குளம் கொத்தணி தமிழ் மகா வித்தியாலயத்தில் தொடர்ந்து நான்கு வருடங்கள் தொண்டராசிரியராக பணிபுரிந்து வரும் பா. தர்மராஜாவிற்குஇலங்கைப் பிரஜா உரிமை இல்லை என்ற காரணத்தினால் நிரந்தர நியமனம் வழங்கப் படவில்லை.

மேற்படி ஆசிரியருக்கு நிரந்தர நியமனம் வேண்டும் என்று செட்டிகுளம்மகாவித்தியாலய உயர்வகுப்பு மாணவர்கள் வவுனியா கல்வித் திணைக்களத்திடம் முறையிட்டுள்ளனர்.

குறிப்பிட்ட ஆசிரியர் கணிதப் பாடம் கற்பிப்பவர் என்றும் இவரிடம் சிலவருடங்களுக்கு முன்னர் பாடம் கற்றவருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. என்றும்நேற்று செட்டிகுளம் உயர் வகுப்பு மாணவர் குழு தெரிவித்தது. தற்பொழுது இவர்களில் எல்லோரும் பிரஜா உரிமை உண்டு என்று வவுனியா மாவட்ட விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் திரு தினேஷிடம் இம் மாணவர் குழு முறையிட்டுள்ளது. (தி)

அந்த மருந்துக்கடைக்குள் நுழைந்தவர் மூன்றாவது ரகத்தைச் சேர்ந்த மருந்தொன்றைக் கேட்டார்.

அங்கு வேலைபார்க்கும் பெண் பிள்ளை எதுவும் கேட்காமல் உடனடியாகவே மருந்தை எடுத்துக் கொடுத்து விலையையும் சொன்னாள்.

மருந்துகேட்டவர்மருந்து விலைப் பரிசோதனை அதிகாரி என்பது பின்னர்தான் அந்தப் பெண்ணுக்கும் கடைக்காரருக்கும் தெரிய வந்தது.

அந்தக் கடையிலிருந்த குளிர் சாதனப்பெட்டி கூட இயக்கமில்லாத போலி!

பழக்க தோஷமெனினும் இவ்விததவறுகளைச் செய்யக் கூடாது என்று கடும் எச்சரிக்கை செய்தார் அந்த அதிகாரி. அது மட்டுமல்ல மருந்துக்கடைக்காரர் சங்கச் செயலாளரையும் அங்கே அழைத்து விதிமுறைகளை அந்தக் கடைக்காரருக்கு விளக்கமாகச் சொல்லும் படியும் பணித்தார்.

இதையும் நண்பரே சொன்னார்.

## கட்டுரை, கவிதை போட்டிகள்

(வடமராட்சிகிழக்கு)

தென்மராட்சி விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் மாணவர் அமைப்பும், கலை, கலாசார அவையும், பாடசாலை மாணவர்களுக்கிடையே கட்டுரைக் கவிதைப் போட்டியினை நடத்த ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

மாணவ, மாணவிகளிடையே ஐந்து பிரிவுகளாக இப் போட்டி நடத்தப்படவுள்ளன. எதிர்வரும் 28ஆம் திகதி இப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. (36,

ஈழநாதம்

# ஈழப் போராளிக்குழுக்களுக்கு இனி முகாமுமில்லை; பயிற்சியுமில்லை

## சட்டசபையில் முதல்வர் கருணாநிதி அறிவிப்பு

(சென்னை)

இலங்கைத் தமிழ்ப் போராளிக் குழுக்கள் ஆயுதங்களுடன் நடமாடவோ தமிழகத்தில் முகாம்கள் அமைக்கவோ, ஆயுதப்பயிற்சி நடைபெறவோ இனிமேல் தமிழக அரசு அனுமதிக்காது எனத் தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி நேற்று சட்டப்பேரவையில் கூறினார்.

கடந்த மாதம் 18ஆம் திகதி இராமநாதபுரத்தில் தமிழ்ப் போராளிக் குழுக்களைச் சேர்ந்த சிலர் பொது மக்களையும், பொலிஸாரையும் துப்பாக்கியால் சுட்டது குறித்த கேள்வியின்போது முதலமைச்சர் இவ்வாறு கூறினார்.

எந்தத் தமிழ்ப் போராளிக் குழுவும் தமிழ் நாட்டில் வன்முறைகளில் ஈடுபட இடமளிக்கப்படமாட்டாது எனவும் அவர் மேலும் சொன்னார்.

இராமநாதபுரம் சம்பவம் பற்றிக் குறிப்பிட்ட முதலமைச்சர். இது குறித்து தனியாக விசாரணைகள் நடைபெறுவதாகவும், வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், இதில் சம்பந்தப்பட்ட வாகனம் கைப்பற்றப் பட்டுள்ளதாகவும் சொன்னார்,

இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் திரு. குமரி ஆனந்தன் இது குறித்து ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவர முயன்றார்.

தமிழகத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாதிருக்கப் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கடற்கரை வீதிகளில் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ரோந்து நடவடிக்கையும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வெடி குண்டுகள், வெடி மருந்துகளைக் கண்டுபிடிக்க, மோப்பம் பிடிக்கும் நாய்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன எனவும் முதலமைச்சர் கூறினார்.

## அபிவிருத்திச்சங்க கூட்டம்

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய பெற்றோர் ஆசிரிய அபிவிருத்திச் சங்கக் கூட்டம் அதிபர் திரு. தா. சிவசம்பு தலைமையில் நடைபெற்றது. நிர்வாக சபையும்,புதிய உறுப்பினர்களும் தெரிவுசெய்யப் பட்டனர்.

## கருத்தரங்கு

(தீவுப்பகுதி)

பாடசாலைகள் வெறுமனே கல்வி புகட்டும் ஸ்தாபனமாக இருக்கக் கூடாது. இங்கே சாரணீயம், விளையாட்டுக்கள், கலை நிகழ்ச்சிகள் என்பன போதிக்கப்பட வேண்டும்.

மாணவர்கள் உடல் உளரீதியாக வளரக் கூடிய நிலை ஏற்பட வேண்டும். எமது விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லக் கூடியவர்களாகவும் எமது தாயகத்தை காக்கக் கூடியவர்களாகவும் மாணவர்கள் உருவாக்கப்பட வேண்டும். இவற்றிற்கு ஆசிரியர்களின் பங்களிப்பு மிகவும் முக்கியம்.

இவ்வாறு நெடுந்தீவு மேற்கு சைவப்பிரகாச வித்தியாசாலையில்மாணவ, மாணவிகளுக்கான கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய விடுதலைப் புலிகளின் தீவக அரசியல் பொறுப்பாளர் திரு. வீ. கஸ்ரோ குறிப்பிட்டார்.

இதே போன்ற கருத்தரங்குகள் எழுவைதீவு முருகவேல் வித்தியாலயத்திலும், அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயத்திலும் நடைபெற்றது. (15)

## தவில் மேதைக்கு இன்று பாராட்டு விழா

கடந்த மூன்று ஆண்டுகளாக தென்னக இசை உலகில் புகழ்க்கொடி நாட்டி நாடு திரும்பியுள்ள ஈழத்தின் பிரபல தவில்மேதை என். ஆர். சின்னராசாவைக் கௌரவிக்கும் முகமாக காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயமண்டலாபிஷேக பூர்த்தி விழாவின் மாலை நிகழ்ச்சியில் ஆலய நிர்வாகத்தினரும் இணைந்து ஒரு பாராட்டு விழாவை ஒழுங்கு செய்துள்ளனர், இன்று வெள்ளி மாலை நடைபெறும் இவ்விழாவில் தவில்மேதை என்.ஆர்.சின்னராசா பொன்னாடை, பதக்கம் சூட்டி கௌரவிக்கப் படுவார்,

இன்றையநிகழ்ச்சிக்கு ஆலய மணி ஆசிரியர் புலவர். ஈழத்துச் சிவானந்தன் அவர்கள் தலைமை வகிப்பார்.

காரைநகர் கம்பன் கழக அமைப்பாளர் திரு. ரி. சிவகுமாரன் வரவேற்புரை நிகழ்த்துவார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் அன்னை துர்க்காதுரந்தரி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும், சிவ ஸ்ரீ மகாதேவக்குருக்களும் ஆசியுரைவழங்குவர்:

பாராளுமன்ற உறுப்பினர் சிவமகாராஜா, கலாநிதி வித்துவான் க.ந.வேலன், நாதஸ்வர கலாநிதி எ. கே. பத்மநாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவார்கள்.

பாராட்டுரைகளை கலைப்



தவில் மேதை
என். ஆர். சின்னராசா

பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை, யாழ். பல்கலைக்கழக உதவி விரிவுரையாளர் க. நாகேஸ்வரன், காரைநகர் கம்பன் கழக தலைவர் திரு. ஈ. ஏகநாதன், கம்பன் கழக அமைப்பாளர் இ. ஜெயராஜ் ஆகியோர் நிகழ்த்துவர்.

## பாதிக்கப்பட்ட பெண்களுக்கு

(புங்குடுதீவு)

தீவுப்பகுதிகளில் உள்ள பெண்களுக்கு ஏற்படும் குறைபாடுகள் பற்றியும், கடந்த கால இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு முற்போக்கான பல அபிவிருத்தித் திட்டங்களைப் பெற்றுக் கொடுக்கும் வகையிலும் தீவகமெங்கும் நேரில் சென்று கண்டறிந்து வருவதாக விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் தீவக அரசியல் பொறுப்பாளர் செல்வி சோபிகா கடந்த ஞாயிறன்று புங்குடுதீவு மண்காட்டுபகுதியில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் தெரிவித்தார். (22)

## வீரசிங்கம் மண்டபம் புனரமைப்பு நடவடிக்கை

(பண்டத்தரிப்பு)

யாழ்ப்பாணம் வீரசிங்க மண்டபம் விரைவில் திருத்தி அமைக்கப்படவுள்ளது. புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சு இதற்கான நிதியைஒதுக்கி உள்ளது.

கூட்டுறவுத் தந்தையான அமரர் வீரசிங்கம் நினைவாக இக்கட்டிடம் கட்டப்பட்டு மண்டபம் வாடகைக்கு விடப்பட்டதுடன் இதில் கூட்டுறவு திணைக்களம் செயற்பட்டு வந்தது.

கோட்டை இராணுவ நடவடிக்கை காரணமாக இக்கட்டிடம் பலத்த சேதமடைந்தது.

அடுத்தமாதம் நடுப்பகுதியில் இதன் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது. (12)

## காங்கேசன்துறையில்

## 4000 ரூபா நிவாரணம் சனி, ஞாயிறு வழங்கப்படும்

சுயதொழில் ஊக்குவிப்பு பணம் நாலாயிரம் ரூபா காங்கேசன்துறை இலங்கை வங்கிகிளையில் 24ஆம், 25ஆம் திகதிகளில் வழங்கப்படவுள்ளது.

கிராமசேவகர்பிரிவும் குடும்பங்களில் விபரமும் வருமாறு: 24ஆம், திகதி சனிக்கிழமை:- நகுலேஸ்வரம்-01, துர்க்காபுரம் 340, காங்கேசன்துறை தெற்கு-49, தெல்லிப்பழை வடமேற்கு-94, தெல்லிப்பழை -03, பன்னாலை-04, மாவிட்டபுரம்-06, கொல்லங்கலட்டி-13 வீமன்காமம்-04, கட்டுவன்-22 மயிலிட்டி தெற்கு-02, குரும்பசிட்டி-23, வசாவிளான்-81, மயிலிட்டி வடக்கு-06, மயிலிட்டித்துறை-37, பலாலி கிழக்கு-15, பலலி மேற்கு-52

25ஆம் திகதி ஞாயிறு: அளவெட்டி வடக்கு-403, தையிட்டி-102, காங்கேசன் துறைவடக்கு-95, அளவெட்டி தெற்கு-56.

இத்தினங்களில் நிவாரணப் பணம் பெறாதவர்கள் பட்டியல் யாழ்ப்பாணம் கச்சேரிக்கு திருப்பி அனுப்பப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## வருடாந்த பொதுக் கூட்டம்

யாழ். பிரெஞ்சிய நட்புறவுச் சங்கத்தின் 14 வது வருடாந்த பொதுக் கூட்டம் நாளை 24 ஆம் திகதி சனிக்கிழமை 9.00 மணிக்கு அதன் சங்க நிலையத்தில் நடைபெறவுள்ளது.

## சார்க்மாநாடு.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மே மாதத்திற்கு தள்ளிவைக்க இலங்கை நடவடிக்கை எடுத்தது.

இதேசமயம் புதுடில்லிக்கு விஜயம் செய்திருந்த மாலைதீவு ஜனாதிபதி அப்துல் சயூம் மாலைதீவின் வெற்றி விழாக் கொண்டாட்டத்தையொட்டி சார்க் மாநாட்டையும் அங்கேயே நடத்துவது தான் பொருத்தம் என்று தெரிவித்திருந்தார்.

இதேசமயம் சார்க் மாநாட்டின இப்போதைய தலைமை

## வவுனியா மாவட்டத்தில் புதிதாக 33 பாடசாலைகள்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் புதிதாக முப்பத்து மூன்று பாடசாலைகள் அமைக்கப் பட்டு, அவை யாவும் கடந்த வாரம் முதல் இயங்கி வருகின்றன.

ஆசிரியர் பயிலுனராக இருந்து, நிரந்தர நியமனம் பெற்ற ஆசிரியர்கள் அப்பாடசாலைகளில் நியமிக்கப்பட்டுள்ளனர்,

இத்தகவலை வவுனியா மாவட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ், நவரட்ணராஜா தெரிவித்தார்.

மக்களின் ஒத்துழைப்புடன் தற்காலிகமாகக் கட்டப்பட்ட கட்டிடங்களிலேயே மேற்படி பாடசாலைகள் இயங்கி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நெடுங்கேணிப் பகுதியில், நாவலர் பண்ணை, கோவில் புளியங்குளம், ஊஞ்சல்கட்டி, சேனைப் புலவி, கனகராயன் குளம் பகுதியில், நொச்சிக் குளம், சந்நியாசிப் பரந்தன், மூன்று பாடசாலைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் தற்போது நூற்றி அறுபத்தி மூன்று பாடசாலைகள் இயங்கி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்வருடத்திற்குள் இம் மாவட்டத்தில் மேலும் பல பாடசாலைகள் அமைக்கப் படவுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (தி)

## மாடிக்கட்டடம்

(தீவுப்பகுதி)

வேலணை சரஸ்வதி வித்தியா சாலையின் புதிய மாடிக் கட்டிடத்தின் கீழ்த்தள வேலைகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன.

கீழ்த்தள வேலைகள் பூர்த்தியடைந்ததும் இது திறப்பதற்கான நடவடிக்கைகளை கோட்டக் கல்வி அலுவலகம் எடுத்துள்ளது.

இந்த மேல் மாடி கட்டிடம் கட்டுவதற்கு கல்வித்திணைக்களம் எட்டு லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது. (15)

## அவசரகாலச் சட்டத்தின் சில சரத்துக்கள் நீக்கம்

(கொழும்பு)

அவசரகாலச் சட்டத்தில் உள்ள சில பிரிவுகள் நீக்கப் படவுள்ளதாக பாதுகாப்பு ராஜாங்க வெளிவிவகார அமைச்சர் ரஞ்சன் விஜயரட்னா நேற்று செய்தியாளரிடம் கூறினார்.

இதனால் அவசரகாலச் சட்டத்தின் தாக்கத்தைக் குறைக்க முடியும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

நீக்கப்படவுள்ள பிரிவுகள் பற்றியும் விரைவில் அறிவிக்கப்படும் எனவும் அவர் சொன்னார்.

## ஆசிரியருக்கு கருத்தரங்கு

(வடமராட்சி கிழக்கு)

## நிவாரணம்

## சாவகச்சேரி மக்களுக்கு

வீமன்காமம்-04, கட்டுவன்-22

வும் அறிவிக்கப்பட்டுள்ளது.

றவுள்ளது.

யொட்டி சார்க் மாநாட்டை யும் அங்கேயே நடத்துவது தான் பொருத்தம் என்று தெரிவித்திருந்தார்.

இதேசமயம் சார்க் மாநாட்டின் இப்போதைய தலைமை வகிக்கும் பாகிஸ்தானின் வெளிவிவகார அமைச்சர் கொழும்புக்கு விஜயம் செய்து ஜனாதிபதி பிரேமதாஸாவை யும் வெளிவிவகார அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா வையும் சந்தித்துப் பேசினார்:

இச்சந்திப்பின்போது ஜனாதிபதி பிரேமதாஸா இலங்கையில் மேயில் நடத்த வேண்டுமென வற்புறுத்தியிருப்பதாகத் தெரிய வருகின்றது. ரஞ்சன் விஜயரெட்னா இது சம்பந்தமாக கடந்த வருடம் இலங்கையில் மாநாடு நடைபெறாமைக்கு இந்தியாவே காரணம் எனக் குற்றம் சாட்டினார்.

அதேவேளை சார்க் மாநாடு இலங்கையில் நடைபெற வேண்டுமானால் இவ் வருடத்தில் இரண்டாவதாக நவம்பரில் நடத்தலாம் என இந்திய வெளிவிவகார அமைச்சர் கருத்துத் தெரிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

சார்க்அமைப்பின் இலங்கை இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ். பூட்டான் நேப்பாளம், மாலைதீவு ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

இவ் உறுப்பு நாடுகளில் அநேகமானவை மாலைதீவில் மாநாடு நடப்பதையே ஆதரிப்பதாகவும் தெரிய வருகின்றது. இந்தியா இலங்கையில் நடைபெறுவதை தடுப்பதில் முக்கியமான பங்கு வகிக்கின்றது.

நெடுங்கேணிப் பகுதியில், நாவலர் பண்ணை, கோவில் புளியங்குளம், ஊஞ்சல்கட்டி, சேனைப் புலவி, கனகராயன் குளம் பகுதியில், நொச்சிக் குளம், சந்நியாசிப் பரந்தன், செட்டிகுளம் பகுதியில், முகத்தான் குளம் முதலாம் பாகம், பூசினிப்பிட்டி. அருவித்தோட்டம், கங்கன்குளம், வீரபுரம், காண்டக்குளம், கற்காளம் குளம், கல்லாறு - பூவரசன் குளம் பகுதியில், மணியர் குளம், நித்திய நகர், கணேசபுரம், நீலியாமோட்டை, புலியடி முறிப்பு, கூழாங் குளம், பிரமனாலங்குளம், தாலிக்குளம், பாரதி புரம், புதுக்குளம், கூழாங்குளம், மகாரம்பைக்குளம், அண்ணா நகர், சிறிராமபுரம், கரும் பன்ச்சங்குளம், தம்பனைச் சோலை, மருதனூர், தெற்கிலுப்பைக் குளம், விளாத்திக் குளம் ஆகிய கிராமங் களிலேயே மேற்படி முப்பத்து

ராஜாங்க வெளிவிவகார அமைச்சர் ரஞ்சன் விஜயரட்னா நேற்று செய்தியாளரிடம் கூறினார்.

நீக்கப்படவுள்ள பிரிவுகள் பற்றியும் விரைவில் அறிவிக்கப்படும் எனவும் அவர் சொன்னார்.

நிவாரணம்

# சாவகச்சேரி மக்களுக்கு யாழ். வங்கியில் கொடுப்பனவு

(சாவகச்சேரி)

சாவகச்சேரியிலுள்ள இலங்கை வங்கிக் கிளையில் பணக் கொடுக்கல் வாங்கல்கள் இல்லாத படியால் கீழ்க் கண்ட கிராம சேவகர் பிரிவுகளுக்கு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இலங்கை வங்கிக் கிளையில் பின் வரும் கிராம சேவகர் பிரிவிலுள்ள குடும்பங்களுக்கு 24 ஆம் 25 ஆம் திகதிகளில் நிவாரணம் வழங்கப்படும்.

24 ஆம் திகதியன்று மட்டுவில் தெற்கு, சரசாலை, மட்டுவில் வடக்கு ஆகிய கிராம சேவகர் பிரிவிலுள்ள குடும்பங்களுக்கும், 25 ஆம் திகதியன்று நுணாவில் மேற்கு, நுணாவில கிழக்கு ஆகிய கிராம சேவகர்கள் பிரிவிலுள்ள குடும்பங்களுக்கும் இரண்டாம் கட்ட ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

# மீளக்குடியமர்தல் நிவாரணம் சனி, ஞாயிறு வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

மீளக்குடியமர்தல் நிவாரணப்பணம் ஆயிரம் ரூபா 24ம் 25ம் திகதிகளில் பின்வரும் இலங்கை வங்கிக் கிளைகளில் வழங்கப்படவுள்ளது.

கிராமசேவகர் பிரிவுகளும் வங்கிக்கிளைகளின் விபரங்களும் வருமாறு.

24ம் திகதி சனிக்கிழமை - கரவெட்டி மேற்கு - நெல்லியடிக் கிளை அல்வாய் மேற்கு - பருத்தித்துறைக்கிளை துன்னாலை வடக்கு பருத்தித்துறைக் கிளை, வண்ணார்பண்ணை வடக்கு மேற்கு ஸ்ரான்லி வீதிக்கிளை.

25ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கோண்டாவில் கிழக்கு ஸ்ரான்லி வீதிக்கிளை, புலோலிமேற்கு - பருத்தித்துறைக்கிளை, அம்பன்-பருத்தித்துறைக் கிளை, கரணவாய் தெற்கு-நெல்லியடிக்கிளை, கரணவாய் மேறகு - நெல்லியடிக்கிளை கரணவாய் மத்தி - நெல்லியடிக்கிளை.

24ம் திகதி-மானிப்பாய்-ஆஸ்பத்திரி வீதிக்கிளை, 25ம் திகதி சுதுமலை - ஆஸ்பத்திரி வீதிக் கிளை.

ஊழியர்களின்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் இந்த கோரிக்கை சம்பந்தமாக தீர்மானம் எடுப்பதற்கு இன்று மாலை நான்கு மணிவரை காலக்கெடுவும் கொடுத்துள்ளனர். இதுபற்றி பிரதம தபால் அதிபர் தெரிவிக்கையில் தபால் திணைக்களம் ஊழியர்களிடம் இருந்து சில கல்வித் தகமைகளை எதிர்பார்ப்பதாகவும் இக்கல்வித் தகமை இவ்வூழியர்களிடம் இல்லாததால் புதியவர்களை தாம் சேர்த்துக் கொண்டதாகத் தெரிவித்தார். என்றாலும் மேலதிகாரிகள் பேசி தக்கதொரு முடிவுக்கு வரும் வரை பொறுத்திருந்து பேசித் தீர்க்குமாறு ஊழியர்களை வேண்டிக் கொண்டார். (லோ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப் பெற்றது

## ஆசிரியருக்கு கருத்தரங்கு

(வடமராட்சி கிழக்கு)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ''இப்ரூ'', ''பெஸ்'' ஆகியவற்றுடன் இணைந்து இரண்டுநாள் கருத்தரங்கு இம்மாதம் 24ஆம், 25ஆம் திகதிகளில் கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

''கஷ்டப் பிரதேச கல்விப் பிரச்சினைகள்'' என்னும் தொனிப் பொருள் தொடர்பான கருத்தரங்கே நடைபெறவுளளது (36)

அரச..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

டைமையாக்கப்பட்ட தாபனங்கள் ஏனைய அரசாங்க நிறுவனங்கள் என்பனவற்றுக்கு இது பொருந்தும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான சகல விபரங்களும் சகல திணைக்களத் தலைவர்கள், அமைச்சின் செயலாளர்களுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன.

இந்த நியமனங்கள் பதவியுயர்வுகளில் அரசியல்வாதிகளின் தலையீடுகள் இருப்பதாகவும், திறமை தகமைக்கு முன்னுரிமையளிக்கப்படவில்லை என்றும் வெளியான புகார்களையடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

அதிபர்கள்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்விரு அதிபர்களினது இடமாற்றங்களை சம்பந்தப்பட்ட பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் விரும்பாது அதிருப்தி தெரிவித்ததோடு, வன்மையான ஆட்சேபம் தெரிவித்து இடமாற்றங்களை இரத்துச் செய்யக் கோரியிருந்தனர். இதன் விளைவாகவே இவ்விடமாற்றங்களை கல்வி அமைச்சு இரத்துச் செய்ததாக அமைச்சின் செயலாளர் இ. த. ஆ. ச பொதுச் செயலாளரிடம் தெரிவித்துள்ளார்.

வீடமைப்பு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திய இராணுவத்தால் சேதமாக்கப்பட்ட பகுதிகளைத் திருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுப்பது சிரமம் என அக்கட்டிடத்திற்கு அண்மையில் மாற்றம் பெற்று வந்துள்ள உள்ளூராட்சி அலுவலக ஆணையாளர் திரு. திவகலாலா தெரிவிக்கிறார். (லோ)

## புதுவருடப் போட்டிகள்

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தமிழ் சிங்கள புதுவருட கொண்டாட்டங்களை முன்னிட்டு தாச்சிப் போட்டி, கயிறிழுத்தல் போட்டி, பெண்களுக்கான கயிறிழுத்தல் போட்டி, மென்பந்து, கிரிக்கெற் போட்டி சிங்கள இந்து புதுவருடம் என்ற தலைப்பிலானநாட்டுப்பாடல் போட்டிஎன்பன நடாத்தப்பட உள்ளன.

இது தொடர்பான விண்ணப்பங்களை இம்மாதம் 26 ஆம் திகதிக்கு முன்னர் கிராமசேவகர்களிடம் ஒப்படைக்குமாறும் அறிவிக்கப் பட்டுள்ளது.

தமிழ்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடங்கியிருப்பர்,

அனுராதபுரம், பொலநறுவ, சிகிரியா, கண்டி, கொழும்பு போன்ற இடங்களுக்கே மேற்படி சுற்றுலா மேறகொள்ளப் படும் என்று அதிபர் திரு. கா. லோகசிங்கம் தெரிவித்தார். (தி)

# இயந்திரம் பழுது பார்க்கவும் தென்னந் தும்பு தயாரிக்கவும்

## பயிற்சி நிலையங்கள்

(யாழ்ப்பாணம்)

தொண்ணூறாம் ஆண்டுக்கான இரண்டு புதிய முறைசாராக் கல்விப் பயிற்சி நிலையங்கள் திறக்கப்பட உள்ளன. அவையாவன கடற்படகு வெளியிணைப்பு இயந்திரம் திருத்தும் பயிற்சிநெறிகென மருதங்கேணி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலும் தென்னந்தும்புத் தொழில் பயிற்சி நெறிக்கென குடத்தனை அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலையிலும் புதிய பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப்பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் அந்தந்தப் பிரதேசங்களில் இருந்து கோரப்படுகின்றன நேர்முகப் பரீட்சைகள் ஏப்ரல் 1 ஆம் திகதி அந்தந்தப்பாடசாலைகளில் காலை பத்து மணிக்கு நடைபெறுமென முறைசாராக் கல்விப்பகுதி அதிகாரி திரு சுப்பிரமணியம் தெரிவிக்கின்றார். (லோ)


## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

2 வது லெப்டினன்

செல்வன் றேகன் (தி. சிவபாலன்)

கருங்காலி - காரைநகர்

தாயின் மடியில்: 26 - 09 - 1967

தாயக மண்ணில்: 07 - 02 - 1990



விடிவிற்காய் புறப்பட்ட வீரவேங்கையே
முடிவுதான் தமிழீழம் என முன்னேறிச் சென்றனையே
பொடியாகும் நொடி வாழ்வு - அதனை
பொன்னாக்கி நின்றனையே
விடியும் தமிழ் ஈழம் அதில் வெற்றிச் சூரியனானாயே!

-தீவக மக்கள்